# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,848 — 1969 අප්‍රේල් 3 වැනි බ්‍රහස්පතින්දා — 1969.4.3

14,848 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 3 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 343 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 368 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. .. | 362 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 362 | அந்நியச் செலாவணி உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. .. | 367 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*பதில் அரசாங்க அழுத்தகன்.*

---

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தச்சேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாகப் பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

No.—AB. 24/X. 2068/69

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

பதவி : அதிபர், கனிட்ட தொழில்நுட்ப நிலையம், பதுளை

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள பதுளை, கனிட்ட தொழில்நுட்ப நிலைய அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள், 1969.4.18.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.4.25.

குறிப்புகள்.

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்

வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படு வார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய் வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் . . க்கும் பெண் அனுதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத் திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 8,400—480×6—11,280/- வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தி யான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவ ராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் பின்வருவனவற்றில் ஏதிலேனும் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

1. எந்திரவியல்.

2. கணிதம் அல்லது விஞ்ஞானம்.

3. வர்த்தகம்.

4. பொருளியல்.

(ii) படிப்பித்தல், நிர்வாக அனுபவமாக 5 வருட மொத்த அனுபவம் பெற்றிருப்பதுடன் சிங்களத்தில் சிறந்த அறிவும் பெற்றிருக்க வேண்டும் எந்திரவியல்/ விஞ்ஞான பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப் பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாட சாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத் துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங் கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரி யரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி யடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படி களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக் கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக் கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல் லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப் பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர் களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக் கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்பு வேண்டுமேயன்றி இத்திணைக் களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங் களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த் மானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப் படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப் படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட் டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அர சாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித் தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையரல்லர்.

ம. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969. 3. 27.

4-163—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

### உடற்கல்விப் பரிசோதகர் (சிங்கள) பதவி

கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சிலுள்ள உடற்கல்விப் பரிசோதகர் பதவிகளுக்கு, கீழ்க்காணும் தேவைகளைப் பூர்த்தி செய்வோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவமுறைக்கு அமையத் தயாரிக்கப்பட்டு " நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்தில் 1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**— இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூ.1,980—120 × 16—3,900 வருடாந்தம். வருடாந்தம் ரூ. 2,820 பெறமுன் வினைத்திறன்மைகாண் தடை ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சபள உரித்துடையதுமாகும் நியமனம், முதற்கண், 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் சேமலாப நிதி நலன்களுக்கு உரித்துடையவராவர் ; இதன் பொருட்டு அவர் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு தனது சம்பளத்தில் 5% கட்டணம் செலுத்த வேண்டும். மொத்தம் 10 வருட சேவை புரியுமுன் சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறேன் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளப் பிரமாணங்களின் கீழ் அல்லது சேமலாப நிதி நலனுடைய பதவியொன்றில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை புரிந்திருப்பின் மேற்குறித்த அவரது விருப்பத்தை நியமனத் திகதியிலிருந்து 6 மாதகாலத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

(iii) நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியில் ஏற்கனவே உள்ள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் இப்பதவிக்கு முதற்கண் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

4. **சேவை நிபந்தனைகள்.**—அரசினர் சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படும் ஒருவரைப் பொறுத்தவரையில் அரசகரும மொழி நோக்கத்தின் பொருட்டு—

(i) தகுதிகாண்/பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை, செயற்படுத்தும்பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமையவும் இனிமேல் ஆக்கப்படக்கூடியனவான விதிகளுக்கமையவும் அவர் ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அவர் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

(iv) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் பதவியில் அவர் உறுதிப்படுத்தப்படுதல், ஏனையவற்றுடன், ஒரு வருட, இரு வருட, மூன்று வரு காலத்தில் முறையே Iந், IIந், IIIந் தர தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியுடைதலைப் பொறுத்ததாகும். (Iந், IIந் தரத் தேர்ச்சிப் பரீட்சைகளில், காரியத்துக்கேற்ப ஒரு வருடம் அல்லது 2 வருடங்களில் சித்தியெய்தலாம்). விதிக்கப்பட்ட காலத்துக்குள் இத்தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திலிருந்து மேலும் 6 மாதகாலத்துக்குள் ஒரு பரீட்சையில் சித்தியெய்தாவிடின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட சம்பளம் நிறுத்தப்பட்டு அப்பரீட்சையில் சித்தியெய்தும் காலம்வரை அல்லது கீழ்க்காணும் (V) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் அமையும்வரை சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்தி வைக்கப்படும்.

(v) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்ட சிங்கள தேர்ச்சித் தரம் பெற்றுக் கொள்ளப்படாவிடின் 120ம், 121 ம் இலக்க நிர்வாக விதிகளின் ஏற்பாடுகள் அமையும்.
(சிங்கள மொழி மூலம் சேர்க்கப்படும் அபேட்சகரைப் பொறுத்தவரையில் மேலுள்ள (iii)ம், (iv)ம், (v) நிபந்தனைகள் அமையா).

5. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைப் பூர்த்தி செய்வதாக நிரூபிக்க வேண்டும் :—

(அ) 20.4.69 அன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ஆ) சி. பா. த. அல்லது சமனான அல்லது உயர்தர பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட உடற்கல்வி கல்லூரி ஒன்றினால் வழங்கப்பட்ட தராதரப் பத்திரம் பெற்றிருப்பதுடன் அத்தராதரப் பத்திரத்தைப் பெற்றபின் 3 வருட உடற் கல்வி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது ஓர் அரசினர் பாடசாலையில் உடற்கல்விப் போதனாசிரியராக 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் கலாசாலை ஒன்றில் 5 வருட உடற்கல்வி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்கள மொழியில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்தின்பொருட்டு வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) கல்வி/உயர்தொழில் தகைமைகள் அல்லது இவ்விரண்டினையும் அத்தாட்சிப் படுத்தும் தராதரப் பத்திரங்கள்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம், இப்பதவிக்கான அவருடைய தகுதி ஆகியவை தொடர்பில் சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 3 நற்சாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ள அபேட்சகர்கள் இவ்வுப் பந்தியில் குறிப்பிடப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.)

7. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. அச்சிடப்பட்ட படிவங்கள் ஒன்றும் வழங்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையவே விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

9. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது திணைக்களத் தலைவரால் விதிக்கப்பட்டுள்ள திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவும் போதிய காரணம்காட்டி அதனை ஏற்றுக்கொள்ளுமாறு திணைக்களத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 3 வார காலத்துக்குள் பெறத்தவறும் அபேட்சகர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

தொடரெண் பொ. நி/22/151,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆல மார்ச்சு மீ 27 ந் உ.

### (மாதிரி விண்ணப்பப்படிவம்)

**உடற்கல்விப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (உறுப்பமைய எழுதவும்) : ————.
2. முகவரி : ————.
3. 20.4.69 அன்றுள்ளபடி சரியான வயது—
வரு———— மா.———— நா.————
4. சாதியமும் பெறப்பட்ட வழியும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. சி. பா. த. அல்லது சமமான அல்லது உயர்ந்த பத்திரம் பெற்றிருக்கிறீரா ? (பெற்றிருப்பின் எம்மொழி மூலமும் தராதரப் பத்திரத்தின் பெயரும் குறிப்பிடப்பட வேண்டும்—பிரதியொன்றும் இணைக்கப்பட வேண்டும்) : ————.

7. உடற்கல்வியில் பெற்றுள்ள தகைமைகள் : ————. (தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

8. பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு :—

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————.

(இ) ஆங்கிலம் : ————.

9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ————.

10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் (ஆசிரியராயின் பதிவிலக்கம், பாடசாலைப் பெயர், சம்பள விகிதம், தற்போதைய வருடாந்தச் சம்பளம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகிய வற்றைக் குறிப்பிடவும்) :————.

11. உடற்கல்வியில் பெற்றுள்ள செயல்முறை அனுபவம் (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்) :—

| பாடசாலை/ கல்லூரி பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக் காலம் வரு.மா.நா. | விலகிய தற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12. யுத்த சேவை யாதேனும் புரிந்திருப்பின் அது பற்றிய விபரம் : ————.

(விடுகைப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

13. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இவர்கள் இனத்தவர்களாய் இருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும். 3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப்படிகளல்ல) இணைக்கப்பட வேண்டும். அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை : ————.

14. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

பிரதேச வித்தியாதிபதியின்/பிரதம வித்தியாதிகாரியின் சிபார்சு.

இல :————

க. ப. அ. அமைச்சின் நி. செ. (பொ. நி. கிளை).

————.

பிரதேச வித்தியாதிபதிக்காக/பிரதம வித்தியாதிகாரிக்காக.

திகதி : ————.

4–158/1—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

**நுண் கைப்பணிப் பரிசோதகர் (சிங்கள/தமிழ்) பதவிகள் (கலைகளும் கைப்பணிகளும்/பொறியியல்)**

கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள நுண் கைப்பணிப் பரிசோதகர் (கலைகளும் கைப்பணிகளும்/பொறிமுறை) பதவிகளுக்கு, கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவமுறைக்கமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிரந்தரக் காரியதரிசி கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்தில் 1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ரூபா 1,980—12×16—3,900 வருடாந்தம். வருடாந்தம் ரூபா 2,820 பெறுமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

**குறிப்பு.**—உயர்ந்த ஒரு சம்பள அளவுத்திட்டத்தைப் பெறும் I ம் வகுப்பு தொழிற்றுறை/உயர்தர (நுண்கைப்பணிகள்) பயிற்சிபெற்ற ஆசிரியர் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுமிடத்து அவர்கள் அதே சம்பளத்தில் நியமிக்கப்படுவார்கள் ; எனினும் அச்சம்பள விகிதம் அவர்களுக்கு மட்டுமே பொருந்துவதாகும்.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமனம், முதற்கண், 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும்.

(ii) விதவைகள், அநாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் சேமலாப நிதிநலன்களுக்கு உரித்துடையவராவர் ; இதன் பொருட்டு அவர் அரசினர் சேவை சேமலாப நிதிக்கு தனது சம்பளத்தில் 5% கட்டணம் செலுத்த வேண்டும். மொத்தம் 10 வருட சேவை புரியுமுன் சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறரென தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளப் பிரமாணங்களின் கீழ் அல்லது சேமலாப நிதி நலனுடைய பதவியொன்றில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவை புரிந்திருப்பின் மேற்குறித்த அவரது விருப்பத்தை நியமனத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் தெரிவிக்க வேண்டும்.

(iii) நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியில் ஏற்கனவே உள்ள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் இப்பதவிக்கு முதற்கண் பதில் கடமை புரிபவராக இருக்க வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—அரசினர் சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படும் ஒருவரைப் பொறுத்தவரையில் அரசகரும மொழி நோக்கத்தின் பொருட்டு—

(i) தகுதிகாண்/பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை, செயற்படுத்தும் பொருட்டு ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமையவும் இனிமேல் ஆக்கப்படக்கூடியனவான விதிகளுக்கமையவும் அவர் ஒழுக வேண்டும்.

(iii) தகுதிகாண்/பரீட்சார்த்த காலத்தில் அவர் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

(iv) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் பதவியில் அவர் உறுதிப்படுத்தப்படுதல், ஏனையவற்றுடன், ஒரு வருட, இரு வருட, மூன்று வருட காலத்தில் முறையே I ந், II ந், III ந் தர தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தயடைதலைப் பொறுத்ததாகும். ( I ந், II ந் தரத் தேர்ச்சிப் பரீட்சைகளில்; காரியத்துக்கேற்ப ஒரு வருடம் அல்லது 2 வருடங்களில் சித்தியெய்தலாம்) விதிக்கப்பட்ட காலத்துக்குள் இத்தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியெய்தத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்படும் ; விதிக்கப்பட்ட காலத்திலிருந்து மேலும் 6 மாத காலத்துக்குள் ஒரு பரீட்சையில் சித்தியெய்தாவிடின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட சம்பளம் நிறுத்தப்பட்டு அப்பரீட்சையில் சித்தியெய்தும் காலம்வரை அல்லது கீழ்க்காணும் (V) ம் பந்தியின் ஏற்பாடுகள் அமையும்வரை சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்தி வைக்கப்படும்.

(v) தகுதிகாண்/பரீட்சார்த்த கால முடிவில் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சித் தரம் பெற்றுக் கொள்ளப்படாவிடின் 120 ம், 121 ம் இலக்க நிர்வாக விதிகளின் ஏற்பாடுகள் அமையும்.

(சிங்கள மொழி மூலம் சேர்க்கப்படும் அபேட்சகரைப் பொறுத்த வரையில் மேலுள்ள (iii) ம், (iv) ம், (v) ம், நிபந்தனைகள் அமையா).

5. **தேவைப்படும் தகைமைகள்.**—

(அ) 20.4.69 அன்று 23 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) சி. பா. த. ப. பரீட்சையில் அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(இ) தொழிற்றுறைப் பயிற்சி பெற்ற ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது கைப்பணி (மரவேலை, உலோக வேலை/கலைகளும் கைப்பணிகளும்) ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது மகரகம ஆசிரியர் கலாசாலையால் மரவேலையில் அல்லது உலோக வேலையில்/கலைகளும் கைப்பணிகளும், விசேட பயிற்சியின் பின்வழங்கப்படும் பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) நுண் கைப்பணிகள் படிப்பிப்பதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிங்களத்தில்/தமிழில் சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—தொழிற்றுறைப் பாடங்களில் பிறநாடுகளில் யாதேனும் பயிற்சி நெறிகள் பின்பற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்படிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மூ. கு.**—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) கல்வி/உயர்தொழில் தகைமைகள் அல்லது இவ்விரண்டினையும் அத்தாட்சிப்படுத்தும் தராதரப் பத்திரங்கள்.

(இ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம், இப்பதவிக்கான அவருடைய தகுதி ஆகியவை தொடர்பில் சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள 3 நற்சாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே அரசனிர் சேவையில் உள்ள அபேட்சகர்கள் இவ்வுப பந்தியில் குறிப்பிடப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை).

7. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் உங்கள் கவனம் கோரப்படுகிறது.

8. அச்சிடப்பட்ட படிவங்கள் ஒன்றும் வழங்கப்படமாட்டா. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையவே விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படவேண்டும்.

9. அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் உரிய திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும், அது திணைக்களத் தலைவரால் விதிக்கப்பட்டுள்ள திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவும் போதிய காரணம் காட்டி அதனை ஏற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 3 வார காலத்துக்குள் பெறத்தவறும் அபேட்சகர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு.

தொடரெண் பொ: நி/22/3,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆடு மார்ச்சு மீ 27 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**நுண் கைப்பணிப் பரிசோதகர் (சிங்கள/தமிழ்)**

**(கலைகளும் கைப்பணிகளும்/பொறியியல்) பதவிகளுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் (உறுப்பமைய எழுதவும்) : ————.

2. முகவரி : ————.

3. 20.4.69 அன்றுள்ளபடி சரியான வயது :—
வரு.———— மா.———— நா.————

4. சாதியமும் பெறப்பட்ட வழியும் : ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் : —
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. சி. பா. த. ப. அல்லது சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியெய்தியிருக்கிறீரா ? (அங்ஙனமாயின், எம்மொழிமூலமெனவும், தராதரப் பத்திரத்தின் பெயரையும் குறிப்பிடவும். தராதரப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்பட வேண்டும்) : ————

7. நுண் கைப்பணியில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

8. பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு : —
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.

9. படித்த பாடசாலைகளும் கல்லூரிகளும் : ————.

10. தற்போதைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் (ஆசிரியராயின் பதிவிலக்கம், பாடசாலைப் பெயர், சம்பள விகிதம், தற்போதைய வருடாந்தச் சம்பளம், அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி ஆகியவற்றைக் குறிப்பிடவும்) : ————.

11. நுண் கைப்பணி படிப்பிப்பதில் பெற்றுள்ள அனுபவம் (விபரங்களைக் கீழ்க்காணும் முறையில் கொடுக்கவும்) :

| பாடசாலை/ கல்லூரி பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | விலகிய திகதி | சேவைக் காலம் வரு.மா.நா. | விலகிய தற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| ———— | ———— | ———— | ———— | ———— | ———— |

12. யுத்த சேவை யாதேனும் புரிந்திருப்பின் அது பற்றிய விபரம்:————
(விடுகைப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)

13. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் (இவர்கள் இனத்தவர்களாய் இருக்கலாகாது) பெயர்களும் பதவிப் பெயர்களும். 3 நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் (மூலங்களல்ல) இணைக்கப்பட வேண்டும். அரசினர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் இவற்றை அனுப்ப வேண்டியதில்லை) : ————.

14. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்துக்குப் பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என நான் அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————,

4–158/2—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு

### பாடசாலைக் கட்டடவேலை I ந் தர உப பரிசோதகர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள பாடசாலைக் கட்டட வேலை I ஆந் தர உப பரிசோதகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு :—
ரூ. 1,860—16 × 120—ரூ. 3,780 வருடாந்தம். ரூ. 2,820 க்கு முன் திறமைக் கடப்புப்படி ஒன்றுண்டு.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் ஏற்கனவே அரசினர் சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான பதவிகளை வகிப்பவராயின் பதில் கடமை புரிபவராக அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(ii) நியமிக்கப்படுபவர் மேலும் கடமை புரிதற்குத் தகுதியற்றவரெனத் தகுதிகாண் காலத்தில் காணப்படின், அவர் ஏற்கனவே அரசினர் சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிப்பவராயின், பதில் கடமை புரியும் காலத்தில் அல்லது தகுதிகாண் காலத்தில் அல்லது அக்கால எல்லை முடிவில் அவருடைய சொந்தப் பதவிக்கு அவர் திரும்பவும் மாற்றப்படுவார். நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்காதவராயின் அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நிரந்தரக் காரியதரிசி தீர்மானிக்கும் ஒரு தொகைக்கு அவர் தீர்மானிக்கும் முறையில் பிணை செலுத்த வேண்டும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(அ) 1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதியன்று 25 வயதுக்கு மேற்பட்டவராயும் 40 வயதுக்குக் குறைந்தவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாடு அமையாது.

(ஆ) I ந் தர உப பரிசோதகர் பதவிக்கு பதவியுயர்ச்சி அளித்தற்கான பரீட்சையில் சித்தி எய்தியிருப்பதுடன் ஓவ்சியராக அல்லது II ந் தர உப பரிசோதகராக அல்லது இவ்விரு பதவிகளிலும் 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(இ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

கல்லோயா அபிவிருத்திச் சபையின் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டடக் கலையில் அல்லது கட்டடம் அமைத்தலில் அல்லது அமைப்பெந்திரவியல் வேலைகளில் நடைபெறும் மாலை நேரப் பயிற்சி நெறித் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது சமமான அல்லது உயர்ந்த தொழில்நுட்பத் தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) கட்டடம் அமைத்தல் அல்லது குடியியல் எந்திரவியல் வேலையில் குறைந்தபட்சம் ஐந்து வருட செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவன வற்றின் பிரதிகளை—மூலப் பிரதிகளையல்ல—இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுபடும் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏற்கனவே சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம் அனுப்ப வேண்டியதில்லை)

(ஆ) பெற்றுள்ள ஆக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரங்களும் உயர்தொழிற் தராதரப் பத்திரங்களும் அல்லது இவற்றில் யாதேனும்.

(இ) சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டவையும் விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான தகுதி ஆகியவற்றைக் குறிப்பவையுமான மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள். (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்கள் இங்கு குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டிய தில்லை).

**குறிப்பு.**—இந்த நற்சாட்சிப் பத்திரங்களினதும் தராதரப் பத்திரங்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. மேற்போந்த 4 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பங்களேனும் விண்ணப்பங்கள் தொடர்பான கடிதங்களேனும் நிரந்தரக் காரியதரிசிக்கே அனுப்பப்பட வேண்டுமேயொழிய இவ்வமைச்சிலுள்ள வேறு எவ்வுத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கும் அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா. விண்ணப்பப் படிவங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட வேண்டும்.

10. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து இரு வாரங்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி "நிரந்தரக் காரியதரிசிக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு)" அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, பண்பாட்டுவல்கள் அமைச்சு.

கல்வி, பண்பாட்டுவல்கள் அமைச்சு,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ந் திகதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**பாடசாலைக் கட்டட வேலை I ந் தர உப பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) : ————.
2. முகவரி : ————.
3. 20.4.69 அன்றுள்ளபடி சரியான வயது : வரு... மா... நா...
4. சாதியமும் அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.
6. (அ) தொழில் நுட்பக் கல்வியில் பெற்றுள்ள தராதரப் பத்திரங்கள் : ————.
   (ஆ) தொழில்நுட்பக் கல்வியில் பெற்றுள்ள செயல்முறை அனுபவம் : ————.

| உப பிரதேச அலுவலகத்தின் அல்லது நிலையத்தின் பெயர் | வகித்த பதவி | சேர்ந்த திகதி | மாறிய அல்லது விலகிய திகதி | விலகியதற்கான காரணம் | முழுச் சேவை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. பின்வரும் மொழிகளிலுள்ள அறிவு :—
   (அ) சிங்களம் : ————.
   (ஆ) தமிழ் : ————.
   (இ) ஆங்கிலம் : ————.
8. படித்த பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் பெயர்கள் :————.
9. முழு விபரங்களுடன் தற்போதைய உத்தியோகம் : ————.
10. தற்போதைய சம்பளம், சம்பள விகிதம், சம்பள உயர்ச்சித் திகதி : ————.
11. யுத்த சேவையிலிருந்து விலகியவராயின், அத்தகைய சேவைக் காலம் : ————.
12. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துள்ளவர்களின் (இனத்தவர்களல்லாதவர்கள்) பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.
    (மூன்று நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள்—மூலப்பிரதிகளல்ல—இணைக்கப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்கள் இதைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை).
13. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

4–158/3—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## இலங்கை இராணுவத்தில் உத்தியோகத்தர் ஆளின்மை

இலங்கை இராணுவத்தில் சட்டமுறை உத்தியோகத்தர் நியமனத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு லெப்டினன்ட் அல்லது கப்டன் பதவியில் அவரவர் அனுபவத்திற்கும் அல்லது வேறு விசேட தன்மைகளுக்கு ஏற்பவும் பதவியில் அமர்த்தப்பட்டு இலங்கை இராணுவ பொது சேவைப் படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரருக்கு 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச்சட்டக் கோவையின்படி சம்பளமும் சகாயப்படியும் வழங்கப்படும். மேஜர் பதவி வரையுள்ள சம்பள விகிதம் பின்வருமாறு :—

**லெப்டினன்ட் :** வருடம் 4,860 ரூபாவில் இருந்து 5,580 ரூபா வரை. வருடம் ரூபா 180 படியான இரண்டு பதவி ஏற்றமும், ரூபா 360 படியான ஒரு பதவி ஏற்றமும்.

**கப்டன் :** வருடம் 6,660 ரூபாவில் இருந்து 7,740 ரூபா வரை. வருடம் ரூபா 180 படியான ஆறு பதவி சம்பள ஏற்றமும்.

**மேஜர் :** வருடம் 8,820 ரூபாவில் இருந்து 9,900 ரூபா வரை. வருடம் ரூபா 180 படியான ஆறு சம்பள ஏற்றமும்.

(ஆ) கீழ்க்காணப்படும் சகாயப்பணமும் கொடுக்கப்படும் :—

(i) அரசாங்கத்தினல் அனுமதிக்கப்பட்டபடி பொது உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியும் வாழ்க்கைச் சிறப்புப் படியும் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தானம் ஒன்றில் இடமளிக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும். வாசஸ்தானங்களில் இடமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இப்படிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) விவாகமான உத்தியோகத்தர்களுக்கு சேவை அல்லது அரசாங்கத்தினல் வழங்கப்படும் விவாக இல்லங்கள் கொடுக்கப்படாத விடத்தும் விவாகமாகாத உத்தியோகத்தர்களுக்கு நியமனத்திற்கு ஏற்ப வாசஸ்தல இடவசதிகள் அளிக்கப்படாதவிடத்தும் பொது உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினல் விதிக்கப்பட்டபடி வீட்டு வாடகைகள் வழங்கப்படும்.

(iii) விவாகமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளே வசிக்கும்படி ஆணையிடப்பட்டால் உள்ளே வசிக்கும் ஒவ்வொரு 24 மணித்தியாலத்திற்கும் ரூபா 1.50 வீதம் பிரிந்திருக்கைப்படி வழங்கப்படுவதுடன் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தலத்தில் இடவசதி அளிப்பதுடன் உணவும் கொடுக்கப்படும். வாழ்க்கைச் செலவுப்படி, சிறப்புப்படி, உணவுப்படி அல்லது உறையகப்படியோ வழங்கப்படமாட்டாது.

(iv) மற்றைய படிகள் (அணியடுக்கு, கோலவுடை பேணல் மற்றும் சேவையாளர் படிகள்) 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச் சட்டக் கோவையின் படி வழங்கப்படும்.

(v) பிரயாணப்படிகள், உணவுச் செலவுகள், தங்குமிட, மைற்கூலி, இடமாற்றக்கூலி ஆகியவை அரசாங்கத்தினல் பொது உத்தியோகத்தருக்கு விதிக்கப்பட்டபடி வழங்கப்படும்.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காணப்படும் ஒழுங்குவிதிகளின்படியும் அவரவர்களின் சம்பளம், சேவைக்கேற்பவும் ஆளப்படும்.

(i) 1961 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் இராணுவ வேதனச்சட்டக் கோவையின் பிரகாரமும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 10 ஆந் திகதி 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1949 ஆண்டு உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் இராணுவ உபகாரச்சம்பள பணிக்கொடைச் சட்டக் கோவைக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, இராணுவத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

(அ) **தேசிய இனம்.**—இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) **வயது.**—விண்ணப்பகாரர்கள் 25.4.1969 திகதி 28 வயதுக்குக் கூடாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) **கல்வித்தகைமையும் உயர்தொழிற்தகைமையும்.**—விண்ணப்பகாரர்கள் வழக்குரைஞர்களாகவோ அல்லது வழக்கறிஞர்களாகவோ இருத்தலுடன் இலங்கை உயர்நீதிமன்றங்களில் நான்கு வருடத்துக்குக் குறையாது சட்டவறிஞர் அங்கத்தவராக தீவிர பயிற்சி அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

(ஈ) **வைத்திய தகைமைகள்.**—விண்ணப்பகாரர்கள் இராணுவ வைத்தியப் பரிசோதனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் போன்று எழுதப்பட்டு 25.4.1969 திகதியன்று பகல் 12 மணிக்குப் பிந்தாமல் இராணுவத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களையுடைய கடிதவுறையில் " இராணுவ சட்டமுறை உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். முடிவு திகதிக்குப் பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள், இலங்கை அரசகடற்படையும் இலங்கை அரச ஆகாயவிமானப் படை உட்பட தம் திணைக்களத் தலைவருக்கூடாகத் தம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்களை சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் இணைத்து அனுப்புதல் வேண்டும். இச்சான்றிதழ் அனுப்பப்படாதவிடத்து அரசாங்க பணிக்கொடை சேவைகள் இராணுவ பணிக்கொடைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவைகளின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும்:—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கல்வித் தகைமைகளையும் உயர்தொழில் தகைமைகளையும் நிரூபிக்கும் சான்றிதழ்,

(இ) விண்ணப்பகாரருடன் பரீட்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களினல் வழங்கப்பட்ட இரு நற்சான்றுப் பத்திரங்கள்.

8. மேலேகூறிய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவுசெய்யப்படும். இதன்பின் இறுதித் தெரிவு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரர்களிலிருந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினல் நியமிக்கப்படும் தேர்வுச்சபை ஒன்றினல் நேர்முகப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்வுச்சபைகளினல் நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைகளின் இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச் செலவோ அல்லது பிறசெலவுகளோ இலங்கை அரசாங்கத்தினல் கொடுக்கப்படமாட்டாது.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் இராணுவ பயிற்சி செய்யப்பட்டுப் பின் சட்டமுறை தொழிலில் ஏதாவது ஒரு படைக்கு அமர்த்தப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யுமாறு வேண்டப்படுவர்.

11. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் தமது அடிப்படைச் சம்பளத்தில் 4 விகிதமானதை தமது உதவுதொகையாக படைக்கலந் தாங்கு சேவைகளின் விதவை அநாதை உபகாரச்சம்பள நிதிக்கு வழங்குவதற்கு எழுத்துமூலம் தமது சம்மதத்தை கொடுத்தல் வேண்டும்.

எம். எல். டி. ஏ. பெரேரா,
கேர்ணல்,
இராணுவத் தளபதிக்காக.

கொழும்பு,
1969 ம் ஆண்டு மாச்சு மீ 23 ந் வ

### இலங்கை இராணுவத்தில் சட்டமுறை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :——————.

2. தேசிய இனம் (பரம்பரையான இலங்கைப் பிரஜையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரஜையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) :——————.

3. முகவரி :
வீட்டுவிலாசம் :————.
அலுவலக விலாசம் :————.

4. பிறந்த திகதி :————. 25.4.1969 ஆம் திகதிக்கு
வருடம் :————.
மாதம் :————.
நாள் :————.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய விலாசமும் :————.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகளில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் :————.

8. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————

9. படைதாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, இலங்கை மாணக்கர் படை, அல்லது சாரணர் படை ஆகிய நிறுவகங்களில் இருந்திருப்பின் அவற்றின் விபரம் :————.

10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்கு வேறு விசேட தகைமைகள் இருப்பின் :————.

11. இதற்குமுன் படைக்கலந் தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு :————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக :—

| பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | பொது/உயர்தொழில்களில் சித்தியடைந்த பயிற்சிகள் |
|---|---|---|---|
| | | | |

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களை கீழே தருக :————.

| வேலைகொள்வோரின் பெயர் | செய்த தொழில் | சேவை செய்த காலம் தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| | | | |

14. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரியும்: ————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகைமைகளும் சரியானவை என்றும் உண்மை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :—

4–47—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை
## வெற்றிடம்

**ஆராய்ச்சி, திட்டமிடல் அபிவிருத்திப் பகுதியில் III ஆம், IV ஆம், அல்லது V ஆம் தர பொருளியலறிஞர் பதவி**

1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்த மேற்குறித்த அறிவித்தலைத் தொடர்ந்து, வயது எல்லை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :—

**வயது.**—1.3.1969 ஆந் திகதியன்று 20 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி 10.4.1969 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5,
1969 ம் ஆண்டு மாச்சு மீ 22 ந உ.

4–145—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கமத்தொழிற்றிணைக்களம்
### கம இயந்திரத் தொழிற் போதனாசிரியர் பதவிகள்

கமத்தொழிற்றிணைக்களத்தில் கம இயந்திரத் தொழிற் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழ்காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரித்து, நிரப்பி 19.4.69 க்கு முன்னதாக எனக்குக் கிடைக்க அனுப்பப்படுதல் வேண்டும். தபாலுறையில் இடதுபக்க மூலையில் " கம இயந்திரத் தொழிற் போதனாசிரியர் பதவிகள் " எனக் குறிக்கப்பட்டு, பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பளம் ரூபா 1,860—120—2,820 ரூபாவாகும்.

3. (1) இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாறற் சம்பள உரிமை உடையனவுமாகும். நியமனங்கள் மூன்று வருட தகுதிகாண் எல்லைக்குட்பட்டதாகும்.

(2) அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுது உள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் சிறப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உட்படல் வேண்டும்.

(3) தெரிவு செய்யப்படுவோர் தீவின் எப்பகுதியிலும் சேவை செய்யத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

(4) தெரிவு செய்யப்படுபவர்கள், நிரந்தரச் செயலாளர் தீர்மானிக்கும் தொகையை விதிக்கப்படும் முறையிலே பிணைப்பணமாகச் செலுத்துமாறு கேட்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றிற்குச் சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) 1.4.69 ல் 20 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் எல்லைகள் அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ள அபேட்சகர்களுக்கு அமையா.

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(இ) சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரிசோதனையிற் சித்தியடைந்தவராய் அல்லது இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ் மொழியும் எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறுபாடங்களில் பொது கல்வி தராதரச் சான்றிதழ்ப்(சாதாரண) பரிசோதனையில் அல்லது சமமான பரிசோதனையில் சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.

(ஈ) இலங்கை தொழினுட்பக் கல்லூரியில் தச்சுவேலை, உலோகவேலை, மோட்டார் இயந்திரத் தொழில் ஆகியவற்றில் பெற்ற சான்றிதழ்

அல்லது

(உ) நன்கு மதிக்கப்படுமொரு தொழிற்சாலையில் அல்லது திருக்டர் நிலையத்தில் திருக்டர்கள் மற்றும் விவ

சாய இயந்திரங்கள் கையாளுதல், பராமரித்தல், பழுதுபார்த்தல் ஆகியவற்றில் திறமையான தர இயந்திரத் தொழிலாளிக்குக் கீழ்ப்படா நிலைமையில் 5 ஆண்டுகள் பெற்ற அனுபவம்.

**குறிப்பு.**—நன்கு மதிக்கப்படும் ஒரு தொழிற்சாலையில் அல்லது திருக்டர் நிலையத்தில் திறமையான தர இயந்திரத் தொழிலாளியின் நிலைமைக்குக் கீழ்ப்படா நிலைமையில் கனிட்ட பாடசாலைச் சான்றிதழ் அல்லது 8 ம் வகுப்புச் சித்தி பெற்றுள்ள, திருக்டர்கள் மற்றும் விவசாய இயந்திரங்கள் கையாளுதல், பேணுதல், பழுதுபார்த்தல் ஆகியவற்றில் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்ற இத்திணைக்கள வேலையாளரும் விண்ணப்பிக்கத் தகவுடையோராவர்.

5. விண்ணப்பங்களுடன் அணைத்து அனுப்ப வேண்டிய பிரதிகள் (மூல ஓலைகள் அல்ல) :—

(அ) பிறப்புச்சாட்சிப்பத்திரம் (மு. கு. :ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) மிக உயர்ந்த கல்வி அல்லது தொழினுட்பத் தராதரப் பத்திரம் ;

(இ) அபேட்சகரின் தகைமைகள், குணம், இந்நியமனத்துக்குத் தகுதியுடைமை ஆகியவற்றை விளக்கும் சமீபகாலத்திய குணச்சான்றிதழ்கள் மூன்று. (இவ்வுபபிரிவின் கீழ் தேவைப்படும் குணச்சான்றிதழ்கள் இப்போ அரசாங்க சேவையிலுள்ள அபேட்சகரிடமிருந்து வேண்டப்படுவதில்லை)

6. திணைக்களங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் இக்கந்தோரில் விதிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் வந்துசேருமாயின் அவை, விதிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டாலன்றியும், சம்பந்தப்படுந் திணைக்களத் தலைவர் தாமதத்துக்குரிய தகுந்த காரணங்களைக் காட்டி ஏற்றுக் கொள்ளுமாறு விதந்துரைத்தாலன்றியும் கவனிக்கப்படமாட்டா.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும் கமத்தொழிற் பிரதி பணிப்பாளர் (பரிபாலனம்), கமத்தொழிற்றிணைக்களம், பேராதனை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்குக.

எல். பி. மாரம்பே,
கமத்தொழிற் பிரதி
பணிப்பாளர் (பரிபாலனம்).

கமத்தொழிற்றிணைக்களம்,
பேராதனை,
24.3.69.

மேற்குறித்த விண்ணப்பப் படிவம்

கம இயந்திரத் தொழிற் போதனாசிரியர் பதவி

1. முழுப்பெயர் :————.

2. விலாசம் :————.

3. பிறப்புத் தேதி :————.

4. 1.4.69 இல் சரியான வயது :————.
ஆண்டு————மாதம்————நாள்————

5. விண்ணப்பகாரரின் தந்தையின் பிறப்புத் தேதியும் இடமும் :————.

6. நாட்டினம் :————.

7. பிறப்பிடம் :————.

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.

(இ) விண்ணப்பகாரரின் தந்தையின் தந்தை (பாட்டன்) :————.

(ஈ) விண்ணப்பகரரரின் தந்தைவழிப் பூட்டன் :—

8. கல்வித் தராதரங்கள் :————.

9. தொழினுட்பத் தராதரங்கள் :————.

10. பாடசாலை விட்ட பின்னர் ஆற்றிய தொழில்கள் :——

11. தற்போதைய பதவியும் (ஏதேனுமிருப்பின்) சம்பளமும் :————.

12. திருக்டர், மற்றும் விவசாய இயந்திரக் கருவிகள் ஆகியவற்றைக் கையாளுதல், பேணுதல், பழுதுபார்த்தல் பற்றிய அனுபவ விவரம் :————.

13. அறிவு—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

14. வேறெதேனும் விசேட தராதரங்கள் :————.

இவ்விண்ணப்பப் பத்திரத்திலே என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானதெனவும் உண்மையானதெனவும் பிழையற்றதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் இதில் காணப்படும் விவரங்களில் எதுவும் பொய்யானதென்றோ தவறானதென்றோ தேர்வுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகைமை நீக்கஞ் செய்யப்படப் பாத்திரவாளியாவேன் என்பதையும் நியமனத்துக்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலையினின்றும் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி :————.

4-92—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கூட்டுறவு ஆக்கத் திணைக்களம்

### பிரசார உதவியாளர் பதவி

கூட்டுறவு ஆக்கத்திணைக்களத்தில் பிரசார உதவியாளர் பதவிக்கு இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு பதிவுத்தபால் மூலம் கூட்டுறவு ஆக்கத் திணைக்களம், டியூக் வீதி, கொழும்பு 1 என்ற முகவரியிலுள்ள கூட்டுறவு ஆக்க ஆணையாளருக்கு 23.4.1969 க்கு முன்னர் அனுப்பப்படவேண்டும். இடதுபக்க மூலையில் மேலே "பிரசார உதவியாளர்" என்று தெளிவாக எழுதப்பட்ட காகித உறையில் வைத்து விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும்.

**2. சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டு ஒன்றுக்கு ரூபா 1,620—120×18—3,780. ரூபா 2,820 ஐ அடைவதற்கு முன் வினைத் திறமைகாண் தடை நடைபெறும். வகுக்கப்பட்ட வீதத்துக்கு ஏற்ப வாழ்க்கைச் சிறப்புப் படியும் வாடகைப்படியும் வழங்கப்படும்.

**3. தகைமை :** ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வருவனவற்றுக்குத் திருப்திகரமான சான்றுகள் காட்டவேண்டும் :—

(அ) அவர்/அவள் 23. 4. 1969 இல் 25 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு இந்த வயதுக்கட்டுப்பாடு வேண்டியதில்லை.)

(ஆ) அவர்/அவள் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரத்தில் அல்லது பொதுக் கல்வித் தராதரப்பத்திரத்தில் 2 தேர்வுகளுக்கு அதிகப்படாத தடவைகளில் சிங்களம்/தமிழ், கணிதவியல்/கணக்கு உள்ளிட்ட ஆறு பாடங்களில் தேற்றம் பெற்றிருக்க வேண்டும். அல்லது ஏதாவது உயர்ந்த பரீட்சையில் தேற்றம் பெற்றிருக்கவேண்டும்.

(இ) அவன்/அவள் பத்திரிகைக் கலையில் அல்லது பிரசார வேலையிலும் பிரசுரத்துக்கு விடயங்கள் தயாரிப்பதிலும் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

(ஈ) பிரசுர வேலையிலும் அச்சுக்கலையிலும் நல்லறிவு பெற்றிருக்கவேண்டும்.

(உ) நல்ல பண்புடையவராக இருக்க வேண்டும்.

(ஊ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

4. (i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்துக்குரியதுமாகும். விதவைகள் அநாதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு சம்பளத்தில் உதவு தொகை வழங்க வேண்டும்.

(ii) நிரந்தரமான உபகாரச் சம்பளத்துக்குரிய அரசாங்க தொழில் ஒன்றை ஏற்கனவே வகிக்காதவரானால் நியமனம் பெறுபவர் மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் நிலைக்காலத்தில் வைக்கப்படுவர். அல்லது தற்காலிக உத்தியோகத்தராக 1 ஆண்டு வைக்கப்படுவர்.

(iii) தெரிவு செய்யப்படுபவர் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவை செய்ய வேண்டப்படுவர்.

அரசகரும மொழிச் சட்டத்தின் கீழ் புதிதாகச் சேவையில் சேர்ந்தவர்களெனக் கருதப்படுபவராயின் அவர்/அவள் அரசாங்க மொழிக் கொள்கையைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் இது சம்பந்தமாக ஏற்கெனவே இயற்றப்பட்டனவும், இனிமேல் இயற்றப்படவிருப்பனவுமான விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டப்படுவர்.

5. வேண்டப்படும்போது பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களை சமர்ப்பிக்க வேண்டப்படுவார்கள் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(ஆ) ஆக உயர்ந்த கல்வித் தகைமைப்பத்திரம்.

(இ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள் (ஒன்று அப்பகுதி பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடம் பெற்றதாக இருக்கவேண்டும்.)

குறிப்பு :—வேண்டப்படும்போது சாதனங்களை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்தம் திணைக்களத்தின் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். அவ்விண்ணப்பங்களில் தலைவர் அவ்வாறு அந்த உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால் அவரை அனுமதிப்பதாகக் குறிப்பிடவேண்டும். இவ்வாறில்லாத விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. எல்லா விண்ணப்பங்களும் கிடைத்ததென ஒப்புக்கொள்ளப்படும் . விண்ணப்பங்கள் அனுப்பப்பட்ட 5 நாட்களுக்குள் விண்ணப்பம் கிடைத்ததென ஒப்புக்கொண்ட கடிதம் பெறாதவர்கள் அவர்களுடைய பெயர், முகவரி, விண்ணப்பம் அனுப்பிய தேதி ஆகிய விபரங்கள் இத்திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும்.

8. விண்ணப்பங்களும் ஏனைய தொடர்புகளும் கூட்டுறவு ஆக்கத் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டுமே அன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த ஏனைய உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படக்கூடாது.

9. இவ்வர்த்தமானியின் பகுதி I பிரிவு II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

10. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசி தினத்திற்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தபாலில் ஏற்படக்கூடிய தாமதத்தை தவிர்ப்பதற்கு விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களை வேளைக்கு அனுப்பும்படி வேண்டப்படுகிறார்கள்.

டபிள்யு. பத்திரண,
கூட்டுறவு ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### பிரச்சார உதவியாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
(தனி எழுத்துக்களில்)
2. முகவரி :————.
3. திருமணமானவரா ? இல்லையா ? :————.
4. பிறந்த இடமும் தேதியும் :————.
23.4.1969 இல் வயது :
————ஆண்டுகள்————மாதங்கள்————நாட்கள்

5. அரசாங்க சேவையில் ஏற்கனவே விண்ணப்பதாரர் இருந்தால் அச்சேவைபற்றிய விபரங்கள்:—
(i) திணைக்களத்தின் பெயர் :————
(ii) வகிக்கும் பதவி :————
(iii) வேலை நியமன தேதி :————.
(iv) வேலையிலிருந்து விலகிய திகதியும், விலகியதற்கான காரணமும் :————.

6. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப்பெயர் : ————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தையார் பிறந்த இடம் : ————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப்பாட்டன் பிறந்த இடம் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தை வழிப் பூட்டன் பிறந்த இடம் :————.

7. பரம்பரையாலா அல்லது பதிவு செய்யப்பட்டதனாலா இலங்கையர் ? :————.

8. தற்சமயம் உத்தியோகம் வகிப்பதானால் வகிக்கும் உத்தியோகமும் சேவை விபரங்களும் :————.

9. அரசாங்க வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க கல்வித் தகைமைகள் (தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும். அசல் அல்ல.) :————.

10. சிங்களத்தில், தமிழில், ஆங்கிலத்தில் ஆக உயர்ந்த தகைமைகள் :————.

11. விசேட தகுதிகள், தகைமைகள், அனுபவங்கள் இருப்பின் அவைபற்றிய விபரங்கள் :————.
(தராதரப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

12. நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் :————.

மேலே உள்ள நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதி யளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவை யேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமிக்கப்படுவதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

திகதி :— ————.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

24.3.69

4–191—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

இல. எஸ். எச். 264/67

## பொலிஸ் பகுதி

### தகுதிகாண் உப-பொலிஸ் பரீட்சகர் ஸ்தானங்களுக்கான தெரிவு

கீழ்க்காணும் யோக்கியதாம்சங்கள் உடையவர்களிடமிருந்து இலங்கைப் பொலிஸ் சேவையின் தகுதிகாண் உப பொலிஸ் பரீட்சகர் ஸ்தானங்களுக்கான மனுக்கள் கோரப்படுகின் றன.

2. மனுக்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பம் போன்ற தயாரிக்கப்பட்ட விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி "பதிவுத் தபால்" மூலம் "பயிற்சி அதிபர் பொலிஸ் பயிற்சிக் கலா சாலை" கொழும்பு 1, எச்சலன் சதுக்கம் என்ற விலாசத் திற்கு 1.6.69 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். இத்திணைக்களத்தினால் விண்ணப்பப்பத் திரங்கள் விநியோகிக்கப்படமாட்டா. அத்தோடு விண்ணப் பப்பத்திரங்கள் பெறுவதற்கான கடிதங்களும் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா. விண்ணப்பம் அனுப்பும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உபபொலிஸ் பரீட்சகர் ஸ்தானங் களுக்குரிய விண்ணப்பம்" என்று எழுதப்பட்டிருக்க வேண் டும்.

3. **சம்பள விகிதம்.—**

உப பொலிஸ் பரீட்சகர்களுக்கு முதல் வருடமொன் றுக்கு ரூ. 1,740, இரண்டாம் வருடம் வருட மொன்றுக்கு ரூ. 1,980, இதன்மேல் வருட மொன்றிற்கு ரூ. 2,220 ல் இருந்து (ரூ. 120 ஐந்து உயர்வுகளுடன்) ரூ. 2,820 வரை.

பொலிஸ் பரீட்சகர்களுக்கு 3 ம் வகுப்பினருக்கு—வருடமொன்றுக்கு ரூ. 3,060 ல் இருந்து (ரூ. 120 பத்து உயர்வுகளுடன்) வருடம் ஒன்றிற்கு ரூ. 4,260 வரை.

2 ம் வகுப்பினருக்கு—வருடமொன்றுக்கு ரூ. 4,440 ல் இருந்து (ரூ. 180 நான்கு உயர்வுகளுடன்) வருடமொன்றுக்கு ரூ. 5,160 வரை.

1 ம் வகுப்பினருக்கு வருடமொன்றிற்கு ரூ. 5,340 ல் இருந்து (ரூ. 180 இரண்டு உயர்வுகளுடனும் ரூ. 240 இரண்டு உயர்வுகளுடனும் வருட மொன்றுக்கு ரூ. 6,180 வரை)

(தகுதிகாண் பரீட்சை ரூ. 3,060, 4,440, 5,340 அடைவதற்கு முன்பு நடைபெறும்)

வருடமொன்றுக்கு ரூ. 2,820 சம்பளம் பெறும் தகுதிகாண் உப பொலிஸ் பரீட்சகர்களுக்கு உயர்வு வழங்குவதன் மூலம் இத் தெரிவு நடைபெறும்.

பிரதம பரீட்சகர்களுக்கு.—வருடமொன்றுக்கு ரூபா 6,420 ல் இருந்து (ரூ. 240 மூன்று உயர்வுகளுடனும் ரூ. 360 ஒரு உயர்வுடனும்) ரூ. 7,500 வரை.

திறமையுள்ள சிரேஸ்ட பரீட்சகர்களிலிருந்து இத் தெரிவு நடைபெறும்).

4. **வயது நிபந்தனைகள்.—**

(அ) 1.6.1969 ல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 25 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினருக்கும் பிரித்தா னிய தளங்களில் மாஜி உத்தியோகத்தர்களுக்கும் நிதி பரிபாலனச் சுற்றறிக்கைகள் இலக்கம் 427 லும் இலக்கம் 434 லும் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இதினின்றும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1.6.1969 ல் 30 வயதுக்கு குறைந்தவர்களாயுள்ள தேவையான கல்வித் தராதரத்தைப் பெற்ற இதர தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் கொஸ் தாப்புமார்களும் சார்சன்ட்மார்களும் விண்ணப் பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங் கள் விண்ணப்பங்களை தமது பகுதி மாகாண பொலிஸ் அதிகாரிக்கூடாக பயிற்சி அதிபர் பொலிஸ் பயிற்சிப் பாடசாலை கொழும்பு 1, என்ற விலாசத் திற்கு அனுப்புதல் வேண்டும்.

5. **கல்வி உடல் மற்றும் ஏனைய தராதரங்கள்.—**

(அ) விண்ணப்பதாரிகள் சிரேஸ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அன் றேல் உயர் தராதரங்களைப் பெற்றிருத்தல் வேண் டும். அன்றேல் பொதுக் கல்வித் தராதரப் பரீட்சை யில் (சாதாரணம்) இரு முறைகளுக்கு மேற்படா மல் சிங்களம்/தமிழ் பாஷையுடன் எண்கணிதம்/ கணிதம் உட்பட ஆறுபாடங்கள் சித்தியடைந்திருத் தல் வேண்டும். சிறந்த விளையாட்டுத்தகைமை உடைய விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை அளிக் கப்படும்.

குறிப்பு.—மாஜி இராணுவத்தினரும் பிரித்தானிய தளங் களின் மாஜி உத்தியோகத்தவரும் கனிஸ்ட தராதரப் பத்திரத்தை உடையவர்களாக விரும்பின் விண்ணப்பிப்பதற்கு தகுதி உடைய வராவார்.

(ஆ) உயரம் 5′ 6″ (குறைந்தது) மார்பு 34″ (இயற்கைச் சுவாசம் விட்டநிலை) கண்பார்வை இயல்பான நிறப் பார்வை உடையவராய் இருத்தல் வேண்டும். கண் ணாடி பாவிப்பவர்கள் அனுமதிக்கப்படமாட்டார் கள். ஒரு விண்ணப்பகாரர் குறித்த உயரம், மார்பு அளவு ஆகியவற்றில் சிறிது குறைவாக இருந்தா லும் இவர் விளையாட்டுத்துறையில் அதிக திறமை காட்டியும் அகில இலங்கை விளையாட்டுப் போட்டி களிலோ அன்று வெளிநாட்டில் இலங்கை விளை யாட்டுப் பிரதிநிதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்ட வராயிருந்தால் இவருடைய விண்ணப்பம், மற்றும் குறிக்கப்பட்டுள்ள தேவைகள் பூரணமாக இருந் தால் கவனிக்கப்படும்.

(இ) இதர தகைமைகள்.—விண்ணப்பதாரர்கள் விவாக மாகாதவர்களாக இருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினருக்கும் பிரித்தானிய தளங்களில் மாஜி உத்தியோகத்தர்களுக்கும் பொலிஸ் விண் ணப்பதாரிகளுக்கும் இதினின்றும் விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் இலங்கை யராக இருத்தல் வேண்டும்.

(ஈ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமனத்திற்கு முன்னதாக வைத்திய சோதனையில் தகுதி உடையவர்களாகக் காணப்படல்வேண்டும். பொலிஸ் சேவையில் வேலைபார்க்கத் தகுதியற்றவர்களெனக் கணிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. நியமன நியதிகள்.—இந் நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையனவுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் பொலிஸ் இதர நிதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

7. சேவை நிபந்தனைகள்.—

(அ) நியமனங்கள் மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் சேவையில் நியமிக்கப்படும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அனுசரணையில் கொண்டுவருவதற்கு இது சம்பந்தமாக ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளதும் இனிமேல் செய்யப்படக் கூடியதுமான சகல விதிகளுக்கும் பிரத்தியேகமாக 1956 ம் ஆண்டில் 33 ம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட விதிகளை நடைமுறையில் கைக்கொண்டு அவைகளுக்கு அமைந்து இணங்கி ஒழுகுமாறு யாவரும் வேண்டப்படுவர்.

(இ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பகிரங்க சேவைக் குழுவினரின் சட்டப்பிரமாணங்களுக்கும் நிதி ஒழுங்கு முறைகளுக்கும் ஒழுங்கு நூலின் பிரமாணங்களுக்கும் பொலிஸ் பிரதம அதிகாரியினால் அன்றேல் அரசாங்கத்தினரால் அவ்வப்போது அனுசரணையில் கொண்டுவரப்படும் நடைமுறைகளுக்கும் அடங்கிநடத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு சேவையாளரும் தகுதிகாண் சேவைக் காலத்தில் இலாக்காவினால் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் சித்தியடையாதவர்களேயும் பொலிஸ், இலாக்காவில் கடமையாற்றத் தகுதியற்றவர்களும் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(உ) தங்கள் நியமனங்களில் உறுதிப்படும்வரை விவாகம் செய்ய இயலாது இயலாதிருப்பினும் இரண்டு வருடத்திருப்திகரமான சேவைக்குப்பின் விவாகம் செய்யவிரும்புவோரின் மனுக்களை பொலிஸ் பிரதம அதிகாரியினால் பரிசீலனை செய்து அனுமதியளிக்கப்படும்.

8. அரசாங்கப் பதவி நியமனம் சம்பந்தமாக இந்த அரசாங்க வர்த்தமானியில் முதலாம் பகுதி இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. விண்ணப்பதாரி கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளைத் தங்கள் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் :

1. பிறப்புச் சான்றுப்பத்திரம்,
2. இரு கிட்டிய கால நற்சான்றுப்பத்திரங்கள்.
3. கல்வித்தகைமை தாரதரப் பத்திரங்கள்.

10. குறித்த திகதிக்குப் பிந்தி அனுப்பப்படுவதும், இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவுறாதனவுமாகிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இத்தகைய விண்ணப்பதாரருக்கு பதில் அறிவிக்கப்படமாட்டாது.

ஈ. எல். அபயகுணவர்தன,
பொலிஸ் பிரதம அதிகாரி.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1, 25 மார்ச்சு, 1969.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### இலங்கை பொலிஸ் சேவையில் தகுதிகாண் உப பொலிஸ் பரீட்சகர்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில் விண்ணப்பகாரரின் பிறப்புச் சான்றிதழில் இருப்பதை அப்படியே கொடுக்கவேண்டும்) :————
2. தகப்பனுரின் முழுப்பெயர் :————.
3. தகப்பனுரின் தொழில் :————.
4. விண்ணப்பகாரரின் சொந்த இடம் :————. மாகாணம் :————. கிட்டிய பொலிஸ் நிலையம் : ————.
5. உயரம் :————. மார்பு இயற்கையான சுவாசம் விட்ட நிலை :————.
6. 1.6.1969 ல் வயது :————. பிறந்த திகதி :———— (பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இணைக்கப்படவேண்டும்)
7. (அ) சாதியம் :————.
(ஆ) நீர் பிறப்பினுல் இலங்கையரா? அன்றேல் பதிவு செய்ததன் பேரில் இலங்கையரா ? :————.
(பதிவு செய்ததினுலானுல் பதிவு செய்த சாட்சிப்பத்திரம் பிரதி இணைக்கப்படவேண்டும்)
(இ) நீர் பிறப்பினுல் இலங்கையரானுல் பிறந்த இடம்: ————.
தகப்பனுர் பிறந்த இடம் :————.
தகப்பனுர் வழிப் பாட்டனுர் பிறந்த இடம் :————
தகப்பன் வழிப் பூட்டனுர் பிறந்த இடம் :————.
8. தற்போதைய தபால் விலாசம் :————.
அந்த விலாசத்திற்கு கிட்டிய பொலிஸ் நிலையம்: ————
9. (அ) நீர் கல்யாணம் செய்தவரா ? :————.
(ஆ) நீர் வைப்பாட்டி வைத்திருக்கிறீரா ? :————.
10. தற்போதைய தொழில் :————.
11. நீர் யுத்தசேவையில் இருந்தவரா ? அல்லது தற்பொழுது இருக்கின்றீரா ? இலங்கையில் இருந்த பிரித்தானிய படைத்தளத்தில் உத்தியோகம் வகித்தீரா? (அப்படியாயின் சேவை நீக்கம் செய்த பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :————.
12. கல்வித்தகைமை—(சித்தியடைந்த கடைசிப் பரீட்சையைக் குறிப்பிடவும். தாரதரப் பத்திரத்தின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :————.
13. ஏதாவது பிரத்தியேக தகைமைகள் உண்டா? :————.
14. விண்ணப்பக்காரரைப் பற்றி விசாரணை செய்யக் கூடிய இருவரினது பெயரும் விலாசமும் தருக : ————.
15. (அ) பொலிஸ் சேவையில் முன் ஏதும் பதவிக்கு மனுச்செய்திருந்தீரா ? (இருந்தால் விபரம்) :————.
(ஆ) பொலிஸ் சேவையில் பதவி வகித்தீரா ? :————.
16. நீர் அல்லது உமது சுற்றத்தாரில் யாராவது ஏதாவது குற்றத்தில் சிக்கியோ கட்டளை பிறப்பிக்கப்பட்டோ, சாட்டப்பட்டோ அல்லது குற்றவாளியெனக் காணப்பட்டோ இருக்கிறீர்களா ? :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

குறிப்பு—விண்ணப்பகாரர் தாமாகவே தங்கள் கையெழுத்தில் மேற்கூறிய விபரங்களை நிரப்பித் தேவையான தாரதரப்பத்திரப் பிரதிகளுடன் "பயிற்சி அதிபர்" பொலிஸ் பயிற்சிப்பாடசாலை, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

4-110—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## பயிற்சிப் பதவியினர்க்கான வெற்றிடங்கள்

### இந்திய வர்த்தகக் கடற்பயிற்சிக் கப்பல் " டப்பறின் "

பம்பாயிலுள்ள இந்திய வர்த்தகக் கடற்பயிற்சிக் கப்பலான " டப்பறின் " இல் நிறைவேற்று தாப் பயிற்சியினருக்கென **1969** ஆம் ஆண்டு ஓகத்து மாதம் ஆரம்பமாகும் இரு வருடப் பயிற்சி நெறிக்கென மூன்று வெற்றிடங்கள் உள.

**2. தேவையான தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரர்கள் இலங்கையர்களாக இருத்தல் வேண்டும்.

(2) 1969 ஜூலை 1 ஆந் தேதியன்று அவர்களது வயது 15½ க்கும் 18 க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

(3) கல்விப் பொதுத் தாரதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில், ஆங்கிலமொழி (பாடத்திட்டம் அ, அல்லது ஆ), கணிதம் ஆகிய பாடங்களிலும், இன்னும் வேறு நான்கு பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஒரேயொரு முறையில் இப் பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்ற அவசியமில்லை.

3. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் " டப்பறின் " விபர மஞ்சரியிலுள்ள பாடத் திட்டத்தின்படி பின்வரும் பாடங்களில் கொழும்பில் நடைபெறும் ஒரு எழுது பரீட்சைக்குத் தோன்ற வேண்டும் :—

ஆங்கிலம், கணிதம், பூகோள்சாஸ்திரம், மூல விஞ்ஞானம், பொது அறிவு.

பூகோளசாஸ்திர விடயத்தில் இந்திய, பாகிஸ்தானிய பூகோளசாஸ்திரங்களுக்குப் பதிலாக இலங்கைப் பூகோள சாஸ்திரம் சேர்க்கப்படும். பரீட்சை ஆங்கிலத்தில் நடத்தப்படும். ஆங்கிலம், கணிதம் (எண்கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம், மூல திரிகோணக் கணிதம் ஆகியவை கணிதத்தில் அடங்கும்) பூகோளசாஸ்திரம் ஆகிய பத்திரங்களில் கவனம் செலுத்தப்படும். பரீட்சையில் தேறுவதற்கு இப்பாடங்கள் ஒவ்வொன்றிலும் 35 சதவீதத்திற்கும் குறையாமல் புள்ளிகள் பெறுதல் வேண்டும். காலக்கிரமத்தில் பரீட்சைக்கான தேதி, இடம் பற்றி ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் அறிவிக்கப்படும்.

4. பயிற்சி நெறி பற்றிய முழு விபரங்களும் " டப்பறின் " விபர மஞ்சரியில் இருக்கின்றன. இந்த விபர மஞ்சரி பிரதியொன்றின் விலை ரூபா 1.50 (தபாற்செலவு வேறு). கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இது விற்பனவுக்கென இருக்கிறது.

5. கோலவுடைகள், புத்தகங்கள். பிரயாணம் ஆகியவைக்கான செலவுகளும், நியாயமானதெனக் கருதப்படும் வேறெதும் செலவுகளும் உட்பட, கட்டணங்கள் அரசாங்கத்தினல் கொடுக்கப்படும். மற்றெல்லாச் செலவுகளையும் பயிற்சிப் பதவியினரின் பெற்றோர்கள், அல்லது பாதுகாவலர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

6. போக்குவரத்து அமைச்சினல் வழங்கப்படும் வெளிநாட்டுப் பயணத்துக்கான கப்பலோட்டி முதல்வரின் சான்றிதழைப் பெற்ற காலத்திலிருந்து 5 வருடங்களுக்குள் இலங்கை அரசாங்கத்தின் சேவைக்கெனத் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி அழைக்கப்பட்டால், குறைந்தது 5 வருடங்களாவது இலங்கை அரசாங்கத்திற்குத் தான் சேவை செய்வதாகப் பொறுப்புக் கொடுக்கும் ஒரு உடன்படிக்கையிலும், இருவரைப் பிணையாகக் கொண்ட ஒரு பிணைப்புச் சாதனத்திலும் அவர் ஒப்பமிடுதல் வேண்டும். இப்படி நடக்கத் தவறினல் பயிலுனர் அல்லது பிணையாக நின்றவர்கள் அல்லது பயிலுனரும் பிணையாக நின்றவர்களும் பயிற்சியினல் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு அனைத்தையும் திருப்பிக் கொடுக்க நேரிடும்.

7. இந்த பயிற்சி நெறி முடிவுற்றதும் கப்பல் நிறுவனம் ஒன்றில் பயிலுனர் அமர்த்தப்படுவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படினும், இந்திய அரசாங்கமோ அல்லது இலங்கை அரசாங்கமோ அவருக்கு வேலை தேடிக்கொடுப்பதற்குப் பொறுப்பாக இருக்கமாட்டாது.

8. தகுதிகாண் பரீட்சையில் சித்திபெறும் பரீட்சார்த்திகள் கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்கு ஒரு தேர்வுக் குழுவின் முன் தோன்ற வேண்டும். தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளை பம்பாயில் கண்பார்வைக்கான ஒரு பரிசோதனைக்கும், மருத்துவப் பரிசோதனைக்கும் போக வேண்டும் என இந்திய அரசாங்கம் நிபந்தனைக்குட்படுத்தும். அந்தக் கட்டத்தில் அவர்கள் விலக்கப்படுவதற்கான ஆபத்தைக் குறைக்கும் நோக்கமாக அவர்கள் இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் அதேவிதமான பரிசோதனைக்குப் போகவேண்டும் என இலங்கை அரசாங்கம் விதிக்கும். இதற்கென ரூபா 31.50 அறவிடப்படும். இந்தப் பரிசோதனை தற்காலிகமானது, இதை இந்திய அரசாங்கம் ஏற்பதற்கில்லை என்பதை உணர்தல் வேண்டும்.

9. இவ்வலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் படிவத்தில் விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும். ரூபா 10 பெறுமதியுள்ள முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அவைகளின் மேல் விண்ணப்பதாரர் கையொப்பமிட வேண்டும். எக்காரணம் பற்றியும் கட்டணத் தொகை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பத்துடன் பின்வரும் சாதனங்கள் அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று.

(ஆ) விண்ணப்பதாரருக்குச் சொந்தமில்லாத இரு பிரமுகர்களிடமிருந்து பெற்ற நன்னடத்தைக்கான சான்றிதழ்களின் பிரதிகள்.

(இ) ஒரு அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து ஒரு மருத்துவ கண்பார்வைச் சான்றிதழ்.

(ஈ) கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) ப் பத்திரத்தின் பிரதியொன்று.

விண்ணப்பம் ஏற்கப்படுவதற்கான முடிவு தேதி 10 மே 1969, அத்தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் கிடைத்தற்கான அறிவித்தல்கள் எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் அனுப்பப்படும்.

நிரந்தரச் செயலாளருக்காக,
தேசியமய சேவைகள் அமைச்சு.

தேசியமய சேவைகள் அமைச்சு.
த. பெ. இல : 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
27.3.1969.

### பயிற்சிப் பதவி—இந்திய வர்த்தகக் கடற்பயிற்சிக் கப்பல் " டப்பறின் " விண்ணப்பப் படிவம்

இப்படிவம் 10 மே 1969 ந் திகதி பி. ப. 4.30 க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக " நிரந்தரச் செயலாளர், தேசியமய சேவைகள் அமைச்சு, த. பெ. இல : 500, காலிமுகச் செயலகம், கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

1. முழுப் பெயர் (குடும்பப் பெயர் முதலில்) :————.
(தடித்த தெளிவான எழுத்தில்)

2. நிரந்தர முகவரி :————.

3. பிறந்த திகதி :————.

4. 1969 ஜூலை 1 ந் திகதி வயது :————.
(வருடங்கள். மாதங்கள், நாட்கள்)

5. தேசிய இனம் :————.

எவ்வாறு அதைப் பெற்றது ?

(இலங்கையர்கள் மட்டும் தகுதியுடையவர்களாவார்கள்)

6. பிறந்த இடம் :————.

(அ) விண்ணப்பதாரரின் :————.

(ஆ) விண்ணப்பதாரரின் தந்தையின் :————.

(இ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டனின் :————.

(ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டனின் :————.

**குறிப்பு.**—விண்ணப்பதாரரும், அவர் தந்தையும் இலங்கையில் பிறந்திருந்தால் (அ) வும், (ஆ) வும் மட்டுமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர் அல்லது அவர் தந்தை இலங்கைக்கு வெளியே பிறந்திருந்தால் (அ), (ஆ), (இ), (ஈ) எல்லாம் நிரப்பப்படுதல் வேண்டும்.

7. சமயம் :————.

8. விண்ணப்பதாரர் கல்விபயிலும் பாடசாலையும், வகுப்பும் :————.

9. அனுமதிக்கப்படுவதற்குத் தேவையான, விண்ணப்பதாரர் சித்தி பெற்ற பரீட்சை, பாடங்கள் பற்றிய விபரங்கள், பரீட்சைத் திகதி உட்பட :————.

10. தந்தையின் முழுப் பெயரும், தொழிலும், முகவரியும் : ————.

11. பாதுகாவலரின் பெயரும், உறவு முறையும் :————. (தந்தையாக இல்லாதவிடத்து)

12. பாதுகாவலரின் முகவரியும், தொழிலும் :————.

13. பம்பாயில் ஒரு நண்பர், அல்லது உறவினர் இருப்பின், அவரின் முகவரியும், தொழிலும் :————.

14. விண்ணப்பதாரர் சாரணராக இருந்ததுண்டா? ————.

15. விண்ணப்பதாரர் நீந்துவாரா ? ————.

| |
|---|
| இங்கே விண்ணப்பதாரர் தேவையான முத்திரையை ஒட்டி, அதன்மீது ஒப்பம் இடுதல் வேண்டும். (திகதியுடன்) முத்திரையின் பெறுமதி ரூபா 10. |

————.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :—

பின்வரும் சாதனங்களை இவ்விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும் :—

(1) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ் பிரதி.

(2) விண்ணப்பதாரருக்குச் சொந்தமில்லாத, மதிப்புக்குரிய இருவரிடமிருந்து பெற்ற நற்பண்பு பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள்.

(3) ஒரு அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரிடமிருந்து பெற்ற மருத்துவ, கண்பார்வைக்கான சான்றிதழ்.

(4) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) சான்றிதழின் பிரதி.

4-162—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

### மின்சாரத் தொழிலாளர் I ம் வகுப்புப் பதவி

கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சிலுள்ள மின்சாரத் தொழிலாளர் I ம் வகுப்புப் பதவிகளுக்கு, கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமையத் தயாரிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு—பொது நிர்வாகக் கிளை, கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு, கொழும்பு 2—என்ற விலாசத்துக்கு 1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரி உபகாரச் சம்பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ஆந் திகதிய 633 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையத் தீர்மானிக்கப்படும். நியமதாரி மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்டதும், உபகாரச் சம்பளம் பெறும் உரிமை வழங்கப்படும்வரை, பகிரங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். உபகாரச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள் அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி அரசினர் சேவைக்கு புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின் அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு அவருடைய பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினர் சேவையில் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரிய வேண்டும்.

(iv) நியமதாரி இத்தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

3. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

(அ) கொழும்பு அல்லது எந்திரவியல், கைத்தொழில் வேலைக்களமாக திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் கடமை புரிபவர்களுக்கு—முதல் 6 மாத காலத்துக்கு நாளாந்தம் ரூ. 3.86 வீதமும் அதன்பின்னர் ரூ. 1,170—42 × 12—1,674—வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல், கைத்தொழில் வேலைக்களமாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படாத ஒரு நிலையத்தில் (வெளியிடங்களில்) கடமை புரிபவர்களுக்கு—முதல் 6 மாத காலத்துக்கு நாளாந்தம் ரூ. 3.30 வீதமும் அதன் பின்னர் ரூ. 1,044—42×8—1,380—வருடாந்தம்.

4. **தேவைப்படும் தகைமைகள் :**

(அ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(இ) (i) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ii) முதலுதவியில் ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றியிருப்பதுடன் முதலுதவி அளிப்பதில் தேர்ச்சி பெற்றிக்க வேண்டும்.

(iii) அளவுத்திட்டம் ஒன்றினை 1/64" அளவிற்கு வாசிக்கக் கூடியவராயும் பின்னப் பரிமாணங்களை பதிவு செய்யக்கூடியவராயும் இருக்க வேண்டும்.

(iv) இயந்திரங்களில் ஏற்படும் குறைபாடுகளைக் கண்டுபிடிக்கக் கூடியவராயும் அவற்றிற்கான காரணங்களை அறிந்து அவற்றை திருத்தக் கூடியவராயும் இருக்க வேண்டும்.

(v) அஞ்சல்கள், தன்னியங்கி உவோற்று மீற்றர் ஒழுங்காக்கிகள் (A. V. R.), இவைபோன்ற கருவிகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும்.

(vi) வரைதல்களையும் விளக்கப் படங்களையும் வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஈ) மேலுள்ள (அ), (ஆ), (இ) ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழ்க்காணும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் தொழில் பயில்வோராக 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும்; இதில் குறைந்பட்சம் 6 வருட சேவை I ம் வகுப்பு தொழில் பயில்வோராகப் புரிந்திருக்கப்பட வேண்டும். (இதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த சேவையில் தொழில் பயில்வோராகப் புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள், வேண்டப்படும் நேரத்தில், கீழ்க்காணும் சாதனங்கள் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரமும் நற்சாட்சிப் பத்திரமும்.

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) தொழிற்றுறை, தொழில்நுட்பத்தகைமைகள் அல்லது இவற்றில் எவையேனும் பெற்றதற்கான அத்தாட்சிப் பத்திரம்.

(ஈ) மேலுள்ள 4 ம் பந்தியின் (ஈ) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிலையங்களில் புரிந்த சேவையை அத்தாட்சிப்படுத்தற்கான சான்றுகள்.

(உ) சிங்களத்தில்/தமிழில் அல்லது இரண்டிலும் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படலாகா.

(2) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் சேர்த்துக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் விண்ணப்பங்களை தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், அவை திணைக்கள/நிலைய தலைவரால் விதிக்கப்பட்ட திகதிக்குமுன் பெற்றுக்கொள்ளப்பட்டன வென்றும் உரிய காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி திணைக்கள/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகிறது.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அதுபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் மேற்குறித்த அறிவித்தலைப் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அதுபற்றி கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறுமிடத்து தனது உரிமை சேர்த்துக்கப்படுதற்கான உரித்தை விண்ணப்பதாரி இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

தொடரெண் : பொ. நி 5/83,
பொது நிர்வாகக் கிளை,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
27.3.1969.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**மின்சாரத் தொழிலாளர் I ம் வகுப்புப் பதவிக்கான விண்ணப்பம்**

(தொடரெண் : பொ. நி/5/83)

1. முழுப் பெயர் (தெளிவாக) :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று—
உள்ளபடி வயது :————.
பிறந்த திகதி :————.
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா ?:————.
7. கல்வித் தகைமைகள் :—
(i) பொது :————.
(ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் :————.
(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை :————.
8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (ஈ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) :————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————.
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ் வளவுக்கு :————.

12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
(அ) படைக்கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப் பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் :————.

14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம்—
(i) வகித்த பதவி :————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபை யொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத் தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

16. தற்போதைய உத்தியோகம் :————. நிலையம் :————.
(i) பதவிப் பெயரும் தரமும் :————.
(ii) நியமனத் திகதி :————.
(iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற் காலிகமானதா, சமயோசிதமா ? :————.
(iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்க லாக) சம்பள விகிதமும் :————.
(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங் கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத் தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதி யற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின், எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி/5/83

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதி யின்முன்/* பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட் டது.

...................... இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/*பின்வரும் திருத்தங்கள் உட்பட சரி யானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————,
பகுதி/நிலையத்தலைவரின் கையொப்பம்.

திகதி :————. பதவிப் பெயர் :————.

* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

4-159—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848.

---

## உள்ளூராட்சி அமைச்சின் நாடுநகர நிருமாணப் பிரிவு

### பரிசோதகர் பதவி

உள்ளூராட்சி அமைச்சின் நாடுநகர நிருமாணப் பிரிவில் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணப்படும் மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு 1969. 4. 20 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எனக்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

**2. சம்பளப்படிகளும் ஒப்பந்த நிபந்தனைகளும்**

(1) இப்பதவிக்குரிய சம்பளம் 3,900—180—ரூ 5,340 வருடாந்தமும், ரூபா 4,980 க்கு முன் வினைத் திறமைகாண் தடையும் கணிக்கப்படும்.

(2) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் கட்டுப்பெத்தை செயல்முறைத் தொழில்நுட்ப நிலையத்தில் கட்டட அமைப்பில் 1 ஆம் 2 ஆம் பயிற்சி நெறியில் சித்தி யெய்தியபின்பே வினைத்திறமைகாண் தடைக்கு மேல் பதவி உயர்ச்சி செய்யப்படுவர்.

3. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உடையதுமாகும். நியமனம் மூன்று ஆண்டுகாலம் தகுதிகாண் நிலையில் வைக்கப்படும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்ப தாரரும் தான்,

(அ) 25 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற் படாதவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவ ராகவும்,

(இ) சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங் களம்/தமிழ் பாஷையுடன் எண்கணிதம்/கணிதம் ஆகியவை உட்பட ஆறுபாடங்களில் இரண்டிற்கு மேற்படாத இருக்கைகளில் அல்லது அதற்குச் சம மான உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவராக வும்,

(ஈ) நில அளவையிலும் மட்டம் பார்த்தலிலும் நில அள வையாளர் தலைமை அதிபதியின் உத்தரவுச் சீட்டைப்பெற்றவராகவும்,

(உ) நில அளவையில் அல்லது கட்டட அமைப்பில் அல்லது சிவில் பொறியியலில் அல்லது நகர நிருமாணத்தில் குறைந்தது 8 வருடச் செயல்முறை அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** கட்டடம் அமைத்தலில் அறிவு பெற்றிருக்கும் அபேட்சகர்களுக்கு முந்துரிமை கொடுக்கப்படும்.

5. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் பிரதிகளை (மூலப்பிரதிகளை அல்ல) இணைத்த ல்வேண்டும் :

(அ) பிறப்புச்சாட்சிப்பத்திரம் (**முக்கிய கவனிப்பு :**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப் பின்பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).;

(ஆ) உயர்கல்வித் தகைமைச் சான்றிதழும், தொழில் நுட்பத்தகைமைச் சான்றிதழும் ;

(இ) விண்ணப்பதாரரின் தகைமைகள், ஒழுக்கம், இப்பத விக்கு நியமிக்கப்படுவதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீப கால நற் சான்றிதழ் (ஏற்கெனவே அரசாங்கசேவையில்

இருக்கும் விண்ணப்பதாரரிடமிருந்து மேற்போந்த உபபிரிவில் குறிப்பிட்டுள்ள நற்சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது).

**குறிப்பு :** சான்றிதழ்களினதும், நற்சான்றிதழ்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற்று, தாமதத்திற்குச் செல்லுபடியான காரணங்கள் அவர்களாற் காட்டப்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டால் அன்றி விதிக்கப்பட்ட திகதியின்பின் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. இவ்விண்ணப்பங்களும் இவை சம்பந்தமான ஏனைய கடிதங்களும் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (நிதியும் தாபனமும்) எழுதப்படவேண்டுமே யன்றி இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக்கும் பெயர் குறிப்பிட்டு எழுதக்கூடாது.

8. அரசாங்கசேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

வே. பத்மநாதன்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(நிதியும் தாபனம்),
உள்ளூராட்சி அமைச்சு.

டி. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு-10,
25. 3. 1969.

## உள்ளூராட்சி அமைச்சு நாடுநகர நிருமாணப்பிரிவு

### பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. முழுப்பெயர் :————.
2. தற்போதைய முகவரி :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
4. தேசிய இனம் :————.
5. தற்பொழுது ஏதும் பதவி வகிப்பின் :————.
6. தற்போது பதவியில் இல்லாவிட்டால் கடைசியாக வகித்த பதவி :————.
   பெற்ற சம்பளம் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. தொழில் நுட்பத் தகைமைகள் :————.
   (சித்தியெய்திய பரீட்சைகளைக் கூறுக)
9. பயிற்சியின் விபரங்கள், தொழிற்பயிற்சி முதலிய திகதிகளுடன் :————.
10. முந்திய அனுபவ விபரங்கள், நியமனங்கள் திகதிகளுடன் :————.
11. ஏற்கெனவே ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் வேலையில் இருந்தால் அதை விட்டு விலகியதற்குரிய காரணம் :————.
12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றத்தின் விபரங்கள் தண்டனை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

ஒப்பம் :————.

திகதி :————.

4-166—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## உள்ளூராட்சி அமைச்சின் நாடுநகர நிருமாணப் பிரிவு

### உதவிப் பரிசோதகர் பதவி

உள்ளூராட்சி அமைச்சின் நாடுநகர நிருமாணப்பிரிவில் உதவிப்பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணப்படும் மாதிரிப் படிவத்தில் நிரப்பப்பட்டு 1969.4.20 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பளம் ரூபா 1,860—120 × 16—3,780 தூபா வருடாந்தம்.

3. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்று சம்பளம் உடையதுமாகும். நியமிக்கப்பட்டவர் 3 ஆண்டு காலம் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தான்—

(அ) 18 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் தூய கணிதமும் ஒரு பாடமாகச் சித்தி எய்தி இருத்தல் வேண்டும் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/தமிழ் பாஷைகளுடன், தூயகணிதத்திலும் வேறு நான்கு பாடங்களிலும் இரண்டிற்கு மேற்படாத இருக்கைகளில் அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம் ஒரு பாடமாகச் சித்தி எய்தி இருத்தல் வேண்டும்.

(ஈ) (1) கனிஷ்ட தொழில்நுட்ப அலுவலாளரின் பயிற்சி நெறியை (இரு வருட முழு நேரத்தில்) முடித்திருக்க வேண்டும் அல்லது மாநகரப் பொறிநுட்பப் பயிற்சிநெறியை (மூன்று வருட மாலை பயிற்சி நெறியில்) கட்டுப்பெத்தை செயல்முறை தொழில்நுட்ப நிலையத்தில் பயின்று அதன்பின் ஒருவருட செயல்முறை அனுபவமும், அல்லது

(2) அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது புகழ்வாய்ந்த பொறியியல் தொழில்நிலையத்தில் அமைப்பு வேலையில் ஏழுவருட அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** மேலே (ஈ) (2) ல் சொல்லப்பட்ட தகைமை உடையவர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் (ஈ) (1) ல் கேட்கப்பட்ட தாரதரத்திற்குக் குறையாத எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் பின்வரும் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம் **(முக்கிய கவனிப்பு—** ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டங்களின் நோக்கத்திற்கெனக் கொடுக்கப்படும் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) உயர்கல்வித் தகைமைச் சான்றிதழும், தொழில்நுட்பத்தகைமைச் சான்றிதழும்.

(இ) விண்ணப்பதாரரின் தகைமைகள், ஒழுக்கம், இப் பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற் சான்றிதழ்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரரிடமிருந்து மேற்போந்த உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சான்றிதழ்கள் வேண்டப்படமாட்டாது).

குறிப்பு : சான்றிதழ்களினதும், நற்சான்றிதழ்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

6. அரசாங்கசேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற்று, தாமதத்திற்குச் செல்லுபடியான காரணங்கள் அவர்களாற் காட்டப்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபார்சு செய்யப்பட்டாலன்றி விதிக்கப்பட்ட திகதியின்பின் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான ஏனைய கடிதங்களும் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (நிதியும் தாபனமும்) எழுதப்படவேண்டுமேயன்றி இப்பகுதியின் உத்தியோகத்தர் எவருக்கும் பெயர் குறிப்பிட்டு எழுதக்கூடாது.

8. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

வே. பத்மநாதன்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(நிதியும் தாபனமும்),
உள்ளூராட்சி அமைச்சு.

டி. ஆர். விஜயவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
1969, மாச்சு 25.

உள்ளூராட்சி அமைச்சின் நாடுநகர நிருமாணப் பிரிவு

**உதவிப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

1. முழுப்பெயர் :————.
2. தற்போதைய முகவரி :————.
3. பிறந்த தேதியும் இடமும் :————.
4. தேசிய இனம் :————.
5. தற்பொழுது ஏதும் பதவி வகிப்பின் :————.
6. தற்பொழுது பதவியில் இல்லாவிட்டால் கடைசியாக வகித்த பதவி :————.
   பெற்ற சம்பளம் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள் :————. (சித்தியெய்திய பரீட்சைகளைக் கூறுக)
9. பயிற்சியின் விபரங்கள், தொழில் பயிற்சி திகதிகளுடன் : ————.
10. முந்திய அனுபவம், நியமனங்கள் முதலியன தேதிகளுடன் :————.
11. ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் ஏற்கெனவே வேலையில் இருந்தால் அதைவிட்டு விலகியதற்குச் சரியான காரணம் :————.
12. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றத்தின் விபரங்கள், தண்டனை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

திகதி :————. ஒப்பம் :————.

4-165—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**பதவி வெற்றிடங்கள்**

நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்கள் முதலாம் தரம், இரண்டாந் தரம், மூன்றுந் தரம் ஆகிய பதவிகளுக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்.—**

(அ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில், அல்லது அதற்குச் சமமான ஒரு பரீட்சையில் ஒரு பாஷையில் விஷேச தகைமையுடன் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அத்துடன்,

(ஆ) (1) அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் ஒன்றில், சங்கீதத்தில் பட்டமோ அல்லது டிப்ளோமாவோ பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(2) நாடகத் தயாரிப்பாளராகவோ அல்லது நடிகராகவோ அனுபவம் பெற்றிருப்பதுடன், அத்துறையில் அக்கறை உள்ளவராகவும் இருக்க வேண்டும் ; அல்லது

(3) எழுத்தாளராக 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது.—**

முதலாந் தரம் .. 30 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.
இரண்டாந் தரம்.. 25 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.
மூன்றுந் தரம் .. 18 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—வயதுக் கட்டுப்பாடும், கல்வித் தகைமைகளும் ஒலிபரப்புத் திணைக்களம்/இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தவிர்க்கப்படும்.—

**வேதனவிகிதம்**

முதலாந் தரம் .. ரூபா 400—625 (5 × 20 + 5 × 25) ரூபா 500 க்கு முன் "வினைத் திறமைகாண் தடை"
இரண்டாந் தரம்.. ரூபா 300—520 (8 × 15, + 5 × 20) ரூபா 345 க்கு முன் " வினைத் திறன் காண் தடை ".
மூன்றுந் தரம் .. ரூபா 250—400 (15 × 10) ரூபா 300 க்கு முன் " வினைத் திறன்காண் தடை ".

இதன் கீழ்க்காணப்படும் மாதிரிப்படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7 " என்று முகவரியிடப்பட்டு 1969 எப்ரல் 15 ம் திகதிக்குப் பிந்தாமல் அவருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். தபால் உறையின் இடதுபுற மூலையில் " நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் " என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கொழும்பு 7, என். டி ஜயவீர,
1969 ம் ஆண்டு மார்ச் மீ 22 ந் உ. மா அதிகாரி.

நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர் பதவி

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. முழுப்பெயர் : ————.
2. முகவரி : ————.
3. நாட்டினம் : ————.
4. விண்ணப்பதாரர் பிறந்த இடமும், திகதியும் : ————. (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
5. விண்ணப்பதாரரின் தந்தை பிறந்த இடம் : ————.
6. கல்வித்தகைமைகள் : ————.
   (1) சிங்களம் : ————.
   (2) தமிழ் : ————.
   (3) ஆங்கிலம் : —.
7. நற்சான்றிதழ் வழங்கியுள்ளோரின் பெயர்களும் முகவரிகளும் :———— (நற்சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
8. முன் அனுபவ விபரங்களும், தேர்வில் உதவியாக அமையும் வேறு ஏதேனும் விவரங்களும் : ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில், நியமனம் பெற்றும், இதன்கண் உள்ள ஏதேனும் விவரங்கள் தவறு அல்லது சரியானவை அல்ல எனக் காணப்பட்டாலும் நான் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கு உரியவனாவேன் என்பதையும், முன்னைய தொழில் பற்றிய பிரதான தகவல் எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தாலும், எனக்கு அதுபோன்ற தண்டனை அளிக்கப்படும் என்பதையும் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

4-123—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் வெற்றிடங்கள்

### பொது எழுதுவினைஞர் சேவை—எழுதுவினைஞர் பதவிகள்

*1969 மார்ச் 14 ஆம் திகதிய அரசாங்க வரத்தமானியில் வெளியான அறிவித்தலைப் பார்க்க.*

*மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 1969 ஏப்பிரல் 20 ஆம் திகதிவரை இத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.*

*பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,*
*செனேற் கட்டிடம், கொழும்பு 1,*
*1969 மார்ச் 27.*

*சீ. குணசிங்கம்,*
*பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின்*
*நிரந்தரச் செயலாளருக்காக.*

*4-197—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848*

---

## பரீட்சையும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*திறைசேரி இல. 1/83/19(ஜி)*

### மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்)—1968, ஒற்ரோபர்

1968, ஒற்ரோபர் மாதம் 28 ஆந் தேதி நடாத்தப்பட்ட இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சம்பந்தமாக மாநாட்டுப் பரீட்சையில் (ஆங்கிலம்) மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆண்டுக்கு 2,940 ரூபாவிற்கு முன்னருள்ள இரண்டாவது வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்கு அவர்கள் இப்பொழுது தகைமை அடைந்துள்ளனர்.

| பெயர் | | திணைக்களம் |
|---|---|---|
| காதர், எ. ஆர். எ. | .. | கைலஞ்ச ஆணையாளர் |
| எதிரிசிங்க, ஜே. எல். | .. | பொதுத் திறைசேரி |
| ஏகாம்பரம், வி. | .. | கச்சேரி, திருக்கோணமலை |
| பர்ணந்து, ரி. பீ. | .. | மாவட்ட நீதிமன்றம், காலி |
| பர்ணந்து, எல். சி. எச். | .. | மாவட்ட நீதிமன்றம், பதுளை |
| கென்றி, டி. எல். | .. | கடற்றொழில் |
| கெப்பிற்றிபொல, கியூ. | .. | மாவட்ட நீதிமன்றம், நீர்கொழும்பு |
| முகமது, எம். எச். இசட். | .. | விலைமதிப்பு |
| நாணயக்கார, ரி. பீ. எச். | .. | பிரதான நீதவான் நீதிமன்றம், கொழும்பு |
| பெரேரா, எம். எச். டபிள்யு. | .. | மாவட்ட நீதிமன்றம், கம்பகா |
| இரத்தினம், பி. எஸ். (திருமதி) | | இலங்கை அரச விமானப் படை |

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969, மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

4–113/1—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

*திறைசேரி இல. 1/83/19 (ஜி).*

### மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள சுருக்கெழுத்தாளர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை (ஆங்கிலம்)—1968, நவம்பர்

1968, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி நடாத்தப்பட்ட இரண்டாவது வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை சம்பந்தமாக மாநாட்டுப் பரீட்சையில் (ஆங்கிலம்) மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் கீழ்த் தரத்திலுள்ள கீழ்க்குறிப்பிட்டுள்ள சுருக்கெழுத்தாளர்கள் சித்தியடைந்துள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆண்டுக்கு 2,940/– ரூபாவிற்கு முன்னருள்ள இரண்டாவது வினைத்திறமைகாண் தடைக்கு மேலாகப் பதவியுயர்த்தப்படுவதற்கு அவர்கள் இப்பொழுது தகைமை அடைந்துள்ளனர்.

| பெயர் | | திணைக்களம் |
|---|---|---|
| த கொஸ்ரா, எவ். டி. (செல்வி) | .. | தேசிய திட்டமிடல் |
| த சொய்சா, எஸ். எம். (திருவாட்டி) | | கமத்தொழில், உணவு அமைச்சு |
| திசநாயக்க, எம். (திருவாட்டி) | .. | அஞ்சல், தொலைச் செய்திப் போக்கு வரத்து அமைச்சு |
| பர்ணந்து, என். ஜே. எல். | .. | காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு |
| கஹவிற்ற, டி. எ. | .. | பொதுத் திறைசேரி |
| லற்றிவ், கே. எம். | .. | சௌக்கிய சேவைத் திணைக்கள அலுவலகம், கண்டி |
| பெரேரா, பி. | .. | தரைப்படைத் தலைமை நிலையம் |
| பீரிஸ், எச். டபிள்யு. | .. | நன்னடத்தைப் பாதுகாவல், குழந்தை பேணல் |
| இராசசூரிய, கே. எஸ். | .. | தரைப்படைத் தலைமை நிலையம் |
| றணசிங்க, டி. (திருவாட்டி) | .. | சந்தைப்படுத்தல் |
| றிச்சார்ட்ஸ், என். இசட். (திருவாட்டி) | | சந்தைப்படுத்தல் |
| சமரசிங்க, பி. டபிள்யு. | .. | கூட்டுறவு ஆணைக்குழு |
| வெலிவிற்றிக்கொட, ரி. எஸ். | .. | உண்ணாட்டு அரசிறை |

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969, மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி.

பீ. டி. உடுவெல,
திறைசேரி இணைப் பிரதிச் செயலாளர்.

4–113/2—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசன இலாகா

#### பொலந்நறுவ உப பிரிவு

இல. 14,845 ஐ கொண்ட 14.3.69 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் உள்ள கேள்விப் பத்திர அறிவித்தலைக் குறித்தாகும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 18.4.69 வரை நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீர்ப்பாசன இலாகா,
பொலந்நறுவ உபபிரிவு,
பொலந்நறுவ,
22.3.1969.

ஆர். துரைராசா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
பொலந்நறுவ உபபிரிவு.

4–45—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**வவுனியா உப–பிரிவு**

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 26 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கீழ்க்காணும் தொகைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட இலங்கையராகிய ஒப்பந்தகாரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டிய தொகை | செலுத்த வேண்டிய கேள்விக் கட்டணத் தொகை | | இலாகாவினால் கொடுக்கப் படும் பொருட்கள் |
|---|---|---|---|---|
| 1. கொத்தன் குள வெட்டு வேலை | ரூ. 50,000 மும் அதற்கு மேலும் | ரூபா 100 | .. | சீமெந்து மாத்திரம் |
| 2. பெரிய கட்டுக்குள வெள்ள அழிவுத் திருத்த வேலைகள் | ரூ. 25,000 மும் அதற்கு மேலும் | ரூ. 50 | .. | சீமெந்தும் பி. ஆர். சி. வலையும் |

3. இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் கீழ்க்காணும் அலுவலகங்களில் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 22 ம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் :—

(1) நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், உபபிரிவு, வவுனியா

(2) டிை டிை டிை வவுனிக்குளம், மாங்குளம்

(3) டிை டிை டிை கிளிநொச்சி

(4) டிை டிை டிை ஒட்டுசுட்டான்

(5) டிை டிை டிை முருங்கன்

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப் படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப் படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும்.

4. வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படுமுன் மேற்கூறிய அலுவலகங்கள் ஏதாவதொன்றில் மேற்கூறிய கட்டணத் தொகை/கட்டணத் தொகைகள் செலுத்தப்பட வேண்டும். அல்லது இக்கட்டணத் தொகை/கட்டணத் தொகைகள் ஏதாவதொரு கச்சேரியில் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுக் காட்டப்பட்டாலும் போதுமானது. இக்கேள்விக் கட்டணம் நீர்ப்பாசன இலாகா அதிபரின் பெயரில் செலுத்தப்படவேண்டும்.

5. இந்த வேலைகளுக்கு மேற்குறிப்பிட்டுள்ள பொருட்கள் மாத்திரமே இலாகாவினால் கொடுக்கப்படும். வேறெந்தப் பொருட்களோ ஆயுதங்களோ கொடுபடமாட்டா.

6. இக்கேள்விபற்றிய மேலதிக விபரங்களெல்லாவற்றையும், வவுனியா உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சா. ஓ. அ. சோமநாதர்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனியா உப–பிரிவு.

வவுனியா,
1969 ம் ௵ பங்குனி ௴ 21 ந உ.

4–51—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## *கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு*

***விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்—1968/69***

*விளையாட்டு உபகரணங்கள் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.*

*3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சுக் காரியாலயத்தில் (வினியோகக் கிளையிலிருந்து) 1969 ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 25 ஆந் திகதி பி. ப. 4.30 மணிவரை பெரும்பாலான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.*

*4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடதுபக்க மேல்மூலையில் "விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்—1968/69" என அடையாளமிடப்பட வேண்டும்.*

*5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக் கொண்டு பெற்றமையை ஒப்புக் கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.*

*6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100/-கட்டி, அப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படலாம்.*

*7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.*

*டபிள்யூ. கன்னங்கரா,*
*கணக்காளர் விநியோகம்,*
*நிரந்தரச் செயலாளருக்காக,*
*கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.*

*கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,*
*மலாய் வீதி, கொழும்பு 2,*
*27 மார்ச், 1969.*

*4-106—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848*

## பொதுவேலைத் திணைக்களம்

மதவாச்சிப் பகுதியில் தபால் காரியாலயமும் தபால் காரியாலய அதிபர் இல்லத்திற்கு மேலதிக வேலைகளும் திருத்தங்களும் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் வட மத்திய மாகாணம் பொது வேலைப் பகுதியின் கேள்விச்சபையின் தலைவரால் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 5 ம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும்.

2. பொதுவேலைத் திணைக்கள மதவாச்சி நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரங்களில், இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட வேலைக்கான நிர்மாண வடிவங்களை அப் பொறிவலாளரின் அலுவலகத்தில் பார்வையிடக்கூடியதாகவிருக்கும்.

3. பொதுவேலைத் திணைக்களத்தில் ரூபா 63,000 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100/- செலுத்திய பற்றுச்சீட்டை 1969 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4. 30 மணிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்ட பொறி வலாளரின் பார்வைக்குக் காட்டுவதன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்குத் தகுதி பெறுவர். குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10/- வீதம் மீளளிப்புச் செய்யப் படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தகாரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதி காண் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தை கொழும்பு கோட்டையிலுள்ள பொது வேலைத் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

எம். ஆர். பொன்னுத்து,
கண்காணிப்பு பொறிவலாளர்,
வட மத்திய பகுதி.

கண்காணிப்பு பொறிவலாளர் அலுவலகம்,
பொதுவேலைத் திணைக்களம், அனுராதபுரம்,
1969 மார்ச்சு 24.

4-88—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## வீதிகள் அமைத்தல்—மன்னார் மாவட்டம்

மன்னார் மாவட்டத்தில் கீழ்க்காணும் வீதிகள் அமைப்பதற்காய கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1969 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப் படும்.

1. வட்டுப்பித்தான் மடுவுக்குப் பாதை அமைத்தல்.
2. முருங்கனில் பாதை அமைத்தல்.
3. காடிக்குழியில் பாதை அமைத்தல்.
4. தாமரக்குளம்-மினிக்கன் பாதை அமைத்தல்.
5. பெரியபண்டிவிரிச்சான் குடியேற்றத்திட்டத்தில் பாதைகள் அமைத்தல்.

2. மன்னார்க் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1969 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7 ஆம் திகதிவரை பெறக் கூடிய கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதைப்பற்றிய மேலதிக விபரங்களையும், தகவல்களையும் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களும், அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச்சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவைகளே கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதிவாய்ந்தவை.

3. ஒவ்வொரு விடயத்திற்கும் கேள்விப்பத்திரங்கள் அனுப்புவோர் மன்னார்க் கச்சேரியில் தலா ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் கட்ட வேண்டியதில்லை.

4. கேள்விப்பத்திரங்கள் மன்னார்க் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப் பட்ட தபால் மூலம் "அரசாங்க அதிபர், மன்னார்" என்று விலாசமிட்டு 1969 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் திகதி (8.4.69) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "மன்னார் மாவட்ட வீதி அமைத்தல்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

5. இக்கேள்விப்பத்திரங்கள் மன்னார் கச்சேரியில் 1969 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் திகதி (8.4.69) பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை அனுப்பியோர் சமூகந்தரலாம்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றினைக்காட்டும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் கட்டிய ரூபா 25 ம் பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும்வரை திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

7. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 6 ம் பந்தியில் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழுவேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
**மன்னார் மாவட்டம்.**

4-101—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அனுராதபுர உப பிரிவு

அனுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் வடமத்திய பிரிவு பெரும்பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 26 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்பின் திறக்கப்படும் :—

| வேலையின் விபரம் | பதிவுத் தொகை | கேள்விப்பத் திரக்கட்டணம் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நாச்சடுவ திட்டத்தின்கீழுள்ள ஸ்ருவஸ்தி தோட்டத்தின் 18 ம் வாய்க்காலைப் புதுப்பித்தல் | 27,000 .. | 50 |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள், அனுராதபுரம், மாகாக் கந்தராவ, பதவிய, ருயாங்கனே ஆகிய நீர்ப்பாசனக் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 22ம் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்திக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக்கட்டணமாக மேற்கூறிய தொகையை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் அல்லது ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்களை அனுராதபுர நீர்ப்பாசன உபபிரிவுக் கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அனுராதபுர உபபிரிவு.

அனுராதபுரம்,
1969 ஆண்டு பங்குனி மாதம் 24 ம் திகதி.

4–109—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## கல்வித் திணைக்களம்

### கொழும்பு தெற்குப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு பால் விஸ்கோத்துக்கள் கொண்டு செல்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் கோரல்

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் சேவைகளுக்காக அழைக்கப்படுகின்றன :

(1) பெட்டிகளில் அடைக்கப்பட்ட விஸ்கோத்துக்களை மலிபன் விஸ்கோத்து தயாரிப்பாளர் ஸ்தாபனத்திலிருந்தும் இலங்கை விஸ்கோத்து கொம்பனி ஸ்தாபனத்திலிருந்தும் கீழ்க்காணும் வட்டாரங்களிலுள்ள பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லுதல்.

(2) வெற்றுத் தகரங்களை குறிப்பிட்ட வட்டாரங்களிலுள்ள பாடசாலைகளிலிருந்து குறித்த இரண்டு விஸ்கோத்து தயாரிப்பு நிலையங்கட்கும் கொண்டு செல்லுதல்.

குறிப்பிட்ட வட்டாரங்கள் பின்வருவன :

(1) கொழும்பு மத்தி.
(2) கொழும்பு வடக்கு.
(3) கொழும்பு தெற்கு.
(4) தெகிவளை/கல்கிசை.
(5) மொறட்டுவ.
(6) கோட்டை.
(7) கொலன்னவை.
(8) கொட்டாவ.
(9) ஹோமகம.
(10) அவிசாவலை.
(11) கெஸ்பேவ.
(12) பொறளை.

கொழும்பு 7 கிறீன்பாத் கல்வித்திணைக்களப் பிரதேச வித்தியாதிபதி மேற்கூறிய சேவைகளுக்குரிய கேள்விப் பத்திரங்களை 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் திகதி காலை 10.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மாதிரிப் பத்திரத்தில் அமைந்திருக்க வேண்டும். இம்மாதிரிப் பத்திரங்களை, கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித்திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் திகதி நண்பகல் 12 மணிவரை விநியோகிக்கப்படும். கேள்விப் பொறுப்புப் பணமாக ரூபா 100/- கொழும்பு 7, கிறீன்பாத் கல்வித் திணைக்களத்தில் கட்டியதும் இப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இத்தகைய பொறுப்புப்பணம் கட்டுவதிலிருந்து நீக்கப்பட்டவையாகும்.

கேள்விப் பத்திரங்களை வழங்க முன்னர் கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 10,000/- க்கு குறையாத பெறுமதியுள்ள அசைவற்ற ஆதனங்களையுடையவரென்றும் ஒரு லொறியையாதல் தன் சொந்தப் பெயரில் பதிவு செய்து அதற்குரிய இவ்வருட லைசென்சையும் பெற்றுள்ளாரென்றும் கொழும்பு 7, கிறீன்பாத், கல்வித்திணைக்கள வித்தியாதிபதிக்கு அத்தாட்சிப்படுத்த வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பெறுமுன் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடமிருந்தும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராம அபிவிருத்தி அதிபரிடமிருந்தும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் ஆணையாளரிடமிருந்தும் பெற்றுக்கொண்ட அத்தாட்சிப் பத்திரத்தைக் கொண்டு தாங்கள் இவ்வேலையைச் செவ்வனே செய்து முடிக்கக் கூடியவர்களென்பதைக் குறித்த வித்தியாதிபதிக்கு நிரூபிக்க வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

பிரதேச வித்தியாதிபதியிடமிருந்தோ அல்லது "கெயர்" ஸ்தாபனத்திடமிருந்தோ ஓடர்கள் கிடைத்த ஒரு கிழமைக்குள் விஸ்கோத்து விநியோகத்தைச் செய்து முடித்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக் கொள்ள கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. கேள்வியாளர்கள் இக்கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படும்வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட்ட இறுதி நாளிலிருந்து ஆறு கிழமைவரைக்குள் கேள்விப்பத்திரங்களை வாபஸ் வாங்கப்படலாகாது. கேள்விப்பத்திரம் கோரல்பற்றிய விதிகளையும் மற்றும் விபரங்களையும் கொழும்பு 7, கிறீன்பாத், கல்வி திணைக்களத்தின் நிருவாக உதவியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வி. ஜீ. பீ. முணசிங்க,
பிரதேச வித்தியாதிபதி.

கல்வித்திணைக்களம்,
கிறீன்பாத்,
கொழும்பு 7,
1969 ஆம் ஆண்டு மார்ச்சு 27 ந் தேதி.

4-161—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### கழிக்கப்பட்டதும் தேவையில்லாததுமான பொருட்களின் விற்பனை—பிரதேச டிப்போக்கள்

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் எதிரே குறித்த இ. பொ. ச. வளவிலுள்ள கழிக்கப்பட்டதும், தேவையில்லாததுமான தடுப்புக் குடங்கள், நிமஸ்கள், சில்லுக் குடங்கள், வில் அலகுகள், டியூப்புகள், ஒட்டுமடிப்புகள், ஆசனச் சட்டங்கள், அதிர்ச்சியுறிஞ்சிகள், பலவின் மாற்றுப்புக்கள் முதலியவற்றைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறித்த பிரதேசங்களின் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பிரதேச கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் ஏற்றுக்கொள்ளுவார். கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 50/– ஐ காசாகக் கட்டி, கீழ் குறித்த முகவரியிலுள்ள அவ்வந்தப் பிரதேச முகாமையாளர்களின் அலுவலகங்களிலிருந்தும் எனது அலுவலகத்திலிருந்தும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | பிரதேசம் | கழிவுப் பொருட்கள் கிடைக்குமிடம் | ஏற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரின் முகவரி |
|---|---|---|---|
| 1. | கொழும்பு தெற்கு | இ. பொ. ச. டிப்போ, இரத்மலானை | தலைவர், பிரதேச கேள்விப்பத்திரச் சபை, இ. பொ. ச பிரதேச முகாமையாளரின் அலுவலகம் (கொழும்பு தெற்கு), இல. 170, ஹைலெவல் வீதி, நுகேகொடை |
| 2. | கொழும்பு மத்தி | இ. போ. ச. டிப்போ, மீத்தோட்டமுல்லை | தலைவர், பிரதேச கேள்விப்பத்திரச் சபை, இ. போ. ச. பிரதேச முகாமையாளரின் அலுவலகம் (கொழும்பு மத்தி), இல. 170, ஹைலெவல் வீதி, நுகேகொடை |
| 3. | நீர்கொழும்பு | இ. போ. ச. டிப்போ, நீர்கொழும்பு | தலைவர், பிரதேச கேள்விப்பத்திரச் சபை, இ. போ. ச. பிரதேச முகாமையாளரின் அலுவலகம், இல. 11/4, அர்ச். நினியன்ஸ் மாவத்தை, நீர்கொழும்பு |
| 4. | பதுளை | இ. போ. ச. டிப்போ, பதுளை | தலைவர், பிரதேச கேள்விப்பத்திரச் சபை, இ. போ. ச., பசறை வீதி, கிந்தகொடை, பதுளை |
| 5. | அனுராதபுரம் | இ. போ. ச. டிப்போ, அனுராதபுரம் | தலைவர், பிரதேச கேள்விப்பத்திரச் சபை, இ. போ. ச. பிரதேச முகாமையாளரின் அலுவலகம், ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம் |
| 6. | கொழும்பு கிழக்கு | இ. போ. ச. டிப்போ, மகரகமை | தலைவர், பிரதேச கேள்விப்பத்திரச் சபை, இ போ. ச. பிரதேச முகாமையாளரின் அலுவலகம், (கொழும்பு கிழக்கு). இல. 170, ஹைலெவல் வீதி, நுகேகொடை |

விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதான பொருட்களின் நிரலையும் ஏனைய விபரங்களையும் அவ்வந்தப் பிரதேச முகாமையாளர்களின் அலுவலகங்களிலிருந்தும் கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள பிரதம வினியோக உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விப்பத்திரங்கள் 21.4.69 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முடிவடையும்.**

200, கிருல வீதி, கொழும்பு 5.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

4–156.—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

இல. இப/333/260 (68/69)

## காலிக் கச்சேரி

### கேள்விப் பத்திரம் சம்பந்தமான அறிவித்தல்

காலி மாவட்டத்தில் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள வேலைகளின் பொருட்டு 1969 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை கொழும்பு (த. பெ. 500) காணிக் கொமிசனர் திணைக்களக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அக்கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தோர் அங்கு சமுகமாயிருக்கலாம். காலி முகத்தில் அமைந்துள்ள செக்ரடேரியர் கட்டிடத்தின் 3 ஆவது மாடியிலுள்ள காணிக் கொமிசனர் காரியாலயத்தின் 357 ஆம் இலக்க அறையில் கேள்விப் பத்திரங்களை இடுவதற்காகவுள்ள பெட்டி வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வேலைகட்கும் வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. காலி மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களில் இணைப்பிரதிகளுடனான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வேலைகள் சமபந்தமாகவுள்ள திட்டத்தை மேற் சொல்லப்பட்ட அரசாங்க அதிபரின் காரியாலயத்தில் பார்த்துக்கொள்ளக் கூடியதாயுள்ளதுடன் அது சம்பந்தமான முழு விபரங்களையும் அவரிடமிருந்தே பெற்றுக்கொள்ளலாம்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வவ்வேலைகட்கு முன்னே காட்டப் பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு ஒப்பந்தஞ் செய்துள்ள பதிவுபெற்ற தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும், அரசாங்க வேலை, நீர்ப்பாசனம், கல்வி அல்லது வேறு திணைக்களங்களில் அவ்வவ் வேலைகட்கு முன்னே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்குக் கூடுதலான தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, இவ்வித வேலைகளை நல்ல முறையில் செய்து முடிக்கும் திறமைபெற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் ஆதியனவும் இவ் வேலைகட்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அதற்கு மேற் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க அதிபரிடம் அவ்வாறு பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு திறமைச் சான்றுப் பத்திரமும் ரூபா 100 ஐ கேள்வி வைப்புப் பணமாக வைத்த பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும். 1969 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 19 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும். பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கேள்வி வைப்புப் பணம் வைத்தல் அவசியமில்லை. ஆயினும் அவ்வச் சங்கங்களுக்குரிய திணைக்கள மாவட்டப் பிரதானிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தமது திறமை சம்பந்தமான சான்றுப் பத்திரத்தை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இதற்கான கேள்வி வைப்புப் பணத்தை காலிக் கச்சேரியில் அல்லது காலிக்கு வெளியே வேறு ஏதாவதோர் கச்சேரியில் அல்லது கொழும்பு திறைசேரியில் செலுத்தலாம்.

5. கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "........................................ க்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு, எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் கையெழுத்திட்டு முத்திரையுமிட்டுப் பாதுகாப்பாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

சோமபால களுஆரச்சி,
உதவி அரசாங்க அதிபர்,
காலி அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, காலி,
1969.3.23.

#### அட்டவணை

| | வேலை விபரம் | அமைந்துள்ள இடம் | பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டியதொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மத்தக்க–கொடாமுன வீதி 1 ஆவது மைலில் எஞ்சிய வேலை | பெ.வ.கோ. (கிழக்கு) | 50,000 |
| 2. | மத்தக்க–பொறவகம வீதியில் 1 ஆவது மைல் பாலம் அமைத்தல் | ஷ | 50,000 |
| 3. | நாப்பே உயாபூமிக் குடியேற்றத்திற்கு உள்ளிடும் பாதை | பெ.வ.கோ. (மேற்கு) | 30,000 |
| 4. | பிட்டுவல இளைஞர் விவசாயக் குடியேற்றத்திற்கு உள்ளிடும் பாதை கல் பதித்துத் தாரிடுதல் | பெ.வ.கோ. (கிழக்கு) | 50,000 |

4–94.—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## பொது வேலைத் திணைக்களம்

**பிரதான நிர்மாண பொறியியலாளர், (கட்டிடங்கள்) இரத்மலானை, கட்டிடங்கள் கட்டுவதற்குரிய கட்டிடப் பொருட்கள் வினியோகம்**

கொழும்பு நகரசபை எல்லைக்குள்ளும், நகர சபையில் இருந்து 12 மைல் விஸ்தீரணமுள்ள எல்லைக்குள்ளும் உள்ள இடங்களில் இருந்து கட்டிடப் பொருட்கள் ஏராளமாக இந்த ஸ்தாபனத்திற்குத் தேவைப்படுகின்றன. பிரதான நிர்மாண பொறியியலாளர் புது, வீடுகள் நிர்மாணத் திட்டம், இரத்மலானை, மொறட்டுவாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிட மிருந்து மட்டுமே வினியோகம் ஏற்கப்படும். பதிவு செய்த வினியோகத் தர்கள் வினியோகிக்க விரும்பின் புதிதாகப் பதிவு செய்ய வேண்டும். எந்த வினியோகத்தரும் பதிவு செய்யப்பட்டால் 30.5.69 ந் திகதியில் இருந்து ஒரு மாத காலத்துள் அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

கட்டிடப் பொருட்கள் வினியோகிக்க ஒப்பந்தம் செய்ய விரும்பியவர்கள் தங்கள் விண்ணபங்களை பதிவு செய்யப்பட்ட கடித உறையில் பிரதான நிர்மாண பொறியியலாளர், புது வீடுகள் நிர்மாணத்திட்டம், இரத்மலானை, மொறட்டுவா அவர்களிடம் 30.4.69 பகல் 12 மணிக்கு முன்பாக சேரு மாறு அனுப்பப்பட வேண்டும். காகிதத்தின் இடது மேற்பக்க மூலையில் பிரதான நிர்மாண பொறியியலாளர் (கட்டிடங்கள்) கட்டிட வேலைக் குரிய கட்டிடப் பொருட்களின் வினியோகம் என எழுதல் வேண்டும்.

விண்ணப்பகாரர் தங்களை பதிவு செய்யும் கடிதங்களுடன் பின்வரும் விபரங்களையும் அனுப்ப வேண்டும் :—

(அ) விண்ணப்பகாரர் வினியோகிக்கும் பொருட்கள்,

(ஆ) கட்டிடப் பொருட்கள் வினியோகிக்கக் கூடிய சொந்தவாகனங்க ளாகிய லொறி, ரக்ரர், ரிப்பர் முதலியனவற்றின் பதிவு இலக்கங்களும் அவை இவ்வருடத்திற்கு பாவிப்பதற்கு அனுமதிச் சீட்டு உடையதா எனத் தெரிவிக்க வேண்டும்.

(இ) இவ்வித வேலைகள் முன்னர் செய்த அனுபவ அத்தாட்சிப் பத்திரங்கள்,

(ஈ) விண்ணப்பகாரர் இவ் வேலை செய்வதற்குரிய தகுந்த பொருளா தாரமும் தகுதியும் உடையரென அவ்வூர் மாவட்ட இறைவரி அதிகாரியினால் அத்தாட்சிப் படுத்திய அத்தாட்சிப் பத்திரம்.

### தேவையான பொருட்கள்

(1) கட்டிடத்திற்கு தேவையான நிரப்பு மண் (கிரவல்)
(2) 6″—9″ கருங்கல்லு
(3) 2″ சரளைக்கல் (மெற்றல்)
(4) $1\frac{1}{2}$″ சரளைக்கல் (மெற்றல்)
(5) 1″ சரளைக்கல் (மெற்றல்)
(6) $\frac{3}{4}$″ சரளைக்கல் (மெற்றல்)
(7) ஆற்றுமண்
(8) செங்கல்லு
(9) சுண்ணும்பு (அவித்ததும் அவியாததும்)
(10) சூளைச் சுண்ணும்பு
(11) தற்காலிக ஓடு மேடைக்குத் தேவையான மூங்கில்
(12) வெட்டு மரங்கள்

எச். சீ. டீ. சில்வா,
பிரதான நிர்மாண பொறியியலாளர் (கட்டிடங்கள்).

பொது வேலைத் திணைக்களம்,
த. பெ. இல. 6,
இரத்மலானை, மொறட்டுவா.

—167—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## குடிசனமதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களம்

1969 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19 ம் திகதி காலை 10 மணியளவில் கொழும்பு, 16, அல்பட் கிறசென்றிலுள்ள குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தில் பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலதித்தில் விற்கப்படும். இப் பொருட்களை வாங்க விரும்புவோர் 18.4.69 அன்று பார்வையிடலாம்.

கூடிய தொகையிற் கேட்பவர் பொருட்களை வாங்கலாம். அதே இடத்தில் பணத்தைக் கட்டி உடனடியாகப் பொருட்களை குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள வளவிலிருந்து அகற்ற வேண்டும்.

எல். பீ. ராசகருணு,
குடிசனமதிப்புப் புள்ளிவிபர அதிபர்.

குடிசனமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
த. பெ. இல. 563, கொழும்பு 7,
1969 ம் ஆண்டு மார்ச் மீ 19 ந் உ.

1. பழைய பத்திரிகைகள் .. .. 3 அந்தர்
2. பழைய தட்டச்செழுத்து இயந்திரம் (ஆங்கிலம்) .. 1
3. பழைய மின்சார மோட்டர்கள் .. 2 (கு. ச. 0·25)
4. பழைய வான் ரயர்கள் .. .. 2
5. பழைய கார் பற்றறிகள் .. .. 2

4-4—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

---

## அரசினர் வைத்தியசாலை, கொழும்பு

**பிரசித்த ஏல விற்பனை**

பின்வரும் பழைய பொருட்கள், கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 17 ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

1. பொருட்களை வாங்குபவர்கள் பணம் முழுதும் உடனே கொடுத்து பொருட்களையும் அப்புறப்படுத்தவேண்டும்.

2. எந்த ஒரு பொருளையும் விற்பதா அல்லது இல்லையா என்று தீர்மானிக்கும் அதிகாரம் சௌக்கிய அதிபரிடம் உண்டு.

3. பொருட்களை பார்வை இடுவோர், 1969 ம் ஆண்டு சித்திரை மாதம் 17 ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை அனுமதிக்கப்படுவார்.

4. மேலும் தேவையான விபரங்களை கொழும்பு வைத்தியசாலை அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. நாகேந்திரன்,
அத்தியட்சர்,
கொழும்புப் பகுதி வைத்தியசாலைகள்.

அரசினர் வைத்தியசாலை,
கொழும்பு,
1969 ம் ஆண்டு மார்ச மீ 5 ந் உ.

**பொருட்களின் விபரம்**

(1) மோட்டார் வாகனங்களின் டயர்—650 × 2 .. 7
(2) மோட்டார் வாகனங்களின் டயர்—650 × 18 .. 1
(3) மோட்டார் வாகனங்களின் டயர்—700 × 20 .. 2
(4) மோட்டார் வாகனங்களின் டயர்—550 × 17 .. 4
(5) மோட்டார் வாகனங்களின் ரீப்புக்கள்—700 × 20 .. 2
(6) மோட்டார் வாகனங்களின் பற்றறிகள் .. .. 4
(7) விசிறி—மின்சாரம்—மேசை மொடல் .. .. 2
(8) ரேடியோ பிலிப் செற் No. 5781 .. .. 1
(9) றப்பர் சீட்—யார் .. .. .. 15
(10) சாக்குகள் .. .. .. 950
(11) மர மேசை .. .. .. 1
(12) அளாம் மணிக்கூடு .. .. .. 3
(13) தராசு—படிகளுடன் .. .. .. 1
(14) அம்மி குழவியுடன் .. .. .. 1
(15) மர மேசை—கண்ணாடியில்லாமல் .. .. 1
(16) மர-லொக்கர்கள் .. .. .. 12
(17) மரக்கட்டில் .. .. .. 1
(18) பலவிதமான—சிறிய லொக்கர்கள் .. .. 1
(19) மீட்டர் இன்ரகிறன் .. .. .. 2
(20) விக்ரொறின் றெரன்ஜென் மீட்டர் .. .. 6

4-64—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

## பொருட்களின் ஏல விற்பனை

மீண்ட கடித அலுவலகத்தில் உரிமை கோரப்படாத தபால் உறைகளில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் 1969 ஏப்பிரல் 20 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை பி. ப. 1.30 மணிக்கு கொழும்பு 3, கொள்ளுப்பிட்டி, 19 ம் ஒழுங்கையில் 20 ம் இலக்கத்திலுள்ள, ஒப்படைக்கப்படாத அஞ்சல் நிலையத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எந்தப் பொருளும் நியாயமான ஏலவிலை கிடைக்காவிட்டால் விற்பனையி லிருந்து நிறுத்தி வைக்கப்படும்.

எஸ். பாலசிங்கம்,
அஞ்சல் அதிபர் நாயகத்திற்கும்,
தந்திப் போக்குவரத்து அதிபருக்குமாக.

பி. அ. அ.
கொழும்பு,
1969 ம் ஆண்டு மார்ச்சு மீ 25 ந் வ.

| விடய இலக்கம் | பொருட்களின் விபரம் |
|---|---|
| 1 | 40 இறுத்தல் கொண்ட பாவனையற்ற புதினத்தாள்கள் 35 பைகள் |
| 2 | 40 இறுத்தல் கொண்ட பாவனையற்ற புதினத்தாள்கள் 35 பைகள் |
| 3 | 1 அந்தர் புதினப் பத்திரிகைகள் |
| 4 | 1 கொடாக்—" இன்ஸ்ரமற்றிக் கமரா 100 " |
| 5 | 1 கட்டு ஆங்கில சஞ்சிகைகள் |
| 6 | 1 கட்டு ஆங்கில சஞ்சிகைகள் |
| 7 | 1 கட்டு ஆங்கில சஞ்சிகைகள் |
| 8 | 1 கட்டு ஆங்கில சஞ்சிகைகள் |
| 9 | 1 கட்டு ஆங்கில சஞ்சிகைகள் |
| 10 | 1 கட்டு வெளிநாட்டு பாஷைப் புத்தகங்கள் |
| 11 | 1 கட்டு ஆங்கிலப் புத்தகங்கள் |
| 12 | பாவனை செய்த, வெளிநாட்டு உள்நாட்டு தபால் முத்திரைகள் 20,000 |
| 13 | பாவனை செய்த வெளிநாட்டு உள்நாட்டு தபால் முத்திரைகள் ஏறக்குறைய 20,000 |
| 14 | ஒரு போத்தல் ஸ்ரில்போ கஸ்ரேல் (1000 வில்லைகள்) ஒரு போத்தல் ரி. சி. பி. அழுகலெதிரி. |
| 15 | 4 பல் பிறஸ்—2 எஸ். ஆர். பற்பசை. 2 சவற்காரக் கட்டிகள்—ஒரு பிலாஸ்ரிக் தலையங்கி |
| 16 | தகரப்பால் உணவு (மியோலாக்) ஒரு பெட்டி பெண்கள் பாவனைக்குரிய சிறிய துவாய்கள் ஒரு தொகை உணவு வாசனைகள்—5 சேலைகள் |
| 17 | 1 தகரம் மிளகாய்த் தூள்—ஒரு போத்தல் சுவைக்கூட்டு, ஒரு தகரம் முந்திரிகை வற்றல் |
| 18 | ஒரு பேனை மின்சூள்—2 சிறிய தட்டு—ஒரு சிறிய போத்தல் வெளிநாட்டுக் குடிவகை, ஒரு நைலோன் நூல் கட்டு |
| 19 | 10 இனவாரியான ஆடைவகைத் துண்டுகள்—3 சேட்டுகள் 4 சிறு பிள்ளை அங்கிகள் |

3-97—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் முப்பதாம் திகதி வரையிலுள்ள காலத்திற்குள் புத்தளமாவட்டத்திலுள்ள கள்ளுத் தவறணைக் குத்தகைகளின் விற்பனை

புத்தளம் மாவட்டத்திலுள்ள கள்ளுத் தவறணைகளில் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாந் திகதி தொடங்கி 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் முப்பதாம் திகதி வரையிலுள்ள காலத்தில் சில்லறையாகக் கள்ளு விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் இத்தால் கோரப்படுகின்றன. அவை 21.3.1969 ந் திகதி வெளியான 14,846 ம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளுத் தவறணை குத்தகை விற்பனைகள் நிபந்தனைகளுக்கும் பொது நிபந்தனைகளுக்கும் அமைவாகவே இருக்கும்.

2. " புத்தளம் மாவட்டத்தில் 1969–70 ஆண்டிற்குரிய கள்ளுக்குத்தகைகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் " என குறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கீழே தரப்பட்டிருக்கும் பின்னிணைப்பில் தவறணைக்கு எதிரே தரப்பட்டுள்ள நாள், நேரத்திற்கு முன் கிடைக்கக் கூடியதாக புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3. ஒவ்வோர் கேள்விப்பத்திரமும் குறிக்கப்பட்ட படிவத்தில் கோருபவரின் சொந்தப் பெயரில் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை எந்தக் கச்சேரியிலும் பெற்றுக் கொள்ளலாம். முகவர் ஒருவர் மூலம் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் அனுமதிக்கப்படமாட்டா. வம்சாவழிப் பிரசைகள் அல்லது பதிவுப் பிரசைகள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஒவ்வோர் தவறணைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எந்த நபரும் ஒரு தவறணைக்கு ஒரு முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புதல் கூடாது.

5. ஒவ்வொர் கேள்விப்பத்திரமும் ரூபா 500 க்காய கச்சேரிப் பற்றுச்சீட்டு அணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துக்கும் " பெறுமதிச் சான்றிதழ் " ஒன்று அணைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கேள்விக்காரரும் மேலே கூறப்பட்டுள்ள தவறணைக்குத்தகை விற்பனைபற்றிய நிபந்தனைகளின் 4 (3) (1) ம் பந்தியில் குறிக்கப்பட்டு பெறுமதிச் சான்றிதழ்களுக்கான தேவைகளைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

7. (1) அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கடித உறையின் இடது புற மூலையில் குறித்து அவ்வுறையினுள் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

(2) கேள்விப்பத்திர அறிவித்தல்களைக் கொண்ட ஒட்டப்பட்ட ஒவ்வொரு கடித உறையும் —

(அ) கச்சேரியினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டிகளில் போடப்படலாம்; அல்லது

(ஆ) கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் நாள் நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு மாவட்ட அரசாங்க அதிபருக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படலாம்.

8. எதுவித காரணமும் காட்டாமல் தன்னால் பெறப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஒன்றினையோ அல்லது சகலவற்றையோ நிராகரித்து விடும் உரிமையை அரசாங்க அதிபர் தனக்கென ஒதுக்கி வைத்துள்ளார்.

9. அனுகூலமடையும் கேள்விக்காரர் அல்லது கூறுபவர் அவ்வுரிமையை பெற்றவுடன் விற்பனை நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுவதுடன் அரசாங்க அதிபரால் விதிக்கப்படும் தொகையைப் பிணைப்பணமாகக் கட்டல் வேண்டும்.

10. 21.3.1969 ம் திகதி வெளியிடப்பட்ட 14,846 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் மதுவரி ஆணையாளரால் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகை விற்பனைகளுக்காய நிபந்தனைகளுக்கு அமைவாக நடக்கும்படி சகல கேள்விக்காரரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விபரங்கள் வேண்டுவோர் புத்தளம் கச்சேரிக்கு விண்ணப்பித்தால் பெற்றுக்கொள்ளலாம்.

எம். டப். எஸ். குணரத்ன,
அரசாங்க அதிபர், புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1969 ம் ஆண்டு மார்ச்சு மீ 27 ந் வ.

### மேலே கூறப்பட்ட பின்னிணைப்பு

| தொடர் இலக்கம் | பிரிவு | | உள்ளூர் பகுதி | | கேள்விப்பத்திரங்கள் முடிவடையும் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | புத்தளம் நகரசபை | .. | புத்தளம் நகர சபையில் 2 ம் வட்டாரமான சேனைக்குடியிருயிருப்பு | | 17.4.69 | 9.30 மணி மு. ப. |
| 2 | புத்தளம் பற்று | .. | நாவற்காடு (தளுவை) கிராமத்தினுள் | .. | ஷை | 10.00 மணி மு. ப. |
| 3 | ஷை | .. | மதுரங்குளி .. .. | .. | ஷை | 10.30 மணி மு. ப. |
| 4 | ஷை | .. | முக்குத்தொடுவாவ .. .. | .. | ஷை | 11.00 மணி மு. ப. |
| 5 | ஷை | .. | முந்தல் .. .. | .. | ஷை | 11.30 மணி மு. ப. |
| 6 | கல்பிட்டி | .. | எத்தாலை .. .. | .. | ஷை | 12.00 நண்பகல் |
| 7 | சிலாபம் நகரசபை | .. | சிலாபம் நகரசபையில் 2 ம் வட்டாரமான ஈச்சம்பிட்டி | .. | ஷை | 1.30 மணி பி. ப. |
| 8 | ஷை | .. | சிலாப நகரசபையின் 3 ம் வட்டாரமான அளுத்வத்தை | .. | ஷை | 2.00 மணி பி. ப. |
| 9 | வட பிற்றிகல் கோரலை | .. | தென் உடப்பு .. .. | .. | ஷை | 2.30 மணி பி. ப. |
| 10 | ஷை | .. | களுக்குபனை .. .. | .. | 18.4.69 | 9.30 மணி மு. ப. |
| 11 | ஷை | .. | ஆராச்சிகட்டு .. .. | .. | ஷை | 10.00 மணி மு. ப. |
| 12 | ஷை | .. | பத்துலுஒயா .. .. | .. | ஷை | 10.30 மணி மு. ப. |
| 13 | ஷை | .. | பம்பல .. .. | .. | ஷை | 11.00 மணி மு. ப. |
| 14 | ஷை | .. | ஒளிதமுவ .. .. | .. | ஷை | 11.30 மணி மு. ப. |
| 15 | தென் பிற்றிகல் கோரளை | .. | முதுகட்டுவ .. .. | .. | ஷை | 12.00 மணி நண்பகல் |
| 16 | ஷை | .. | அடப்பரகம .. .. | .. | ஷை | 1.30 மணி பி. ப. |
| 17 | ஷை | .. | மட்டக்கொட்டுவ .. .. | .. | ஷை | 2.00 மணி பி. ப. |
| 18 | ஷை | .. | தொடுவாவ தெற்கு .. .. | .. | ஷை | 2.30 மணி பி. ப. |
| 19 | ஷை | .. | தம்பரவில .. .. | .. | 19.4.69 | 9.30 மணி மு. ப. |
| 20 | ஷை | .. | நஞ்சுண்டான்கரை .. .. | .. | ஷை | 10.00 மணி மு. ப. |
| 21 | ஷை | .. | வாய்க்கால் .. .. | .. | ஷை | 10.30 மணி மு. ப. |
| 22 | ஷை | .. | பொரளஸ்ச .. .. | .. | ஷை | 11.00 மணி மு. ப. |
| 23 | ஷை | .. | தும்மலதெனிய மேற்கு .. | .. | ஷை | 11.30 மணி மு. ப. |
| 24 | ஷை | .. | உல்கிற்றியாவ .. .. | .. | ஷை | 12.00 மணி நண்பகல் |
| 25 | ஷை | .. | பகலகட்டுநேரிய .. .. | .. | ஷை | 1.30 மணி பி. ப. |
| 26 | ஷை | .. | லுனுவில .. .. | .. | ஷை | 2.00 மணி பி. ப. |
| 27 | ஷை | .. | வென்னப்புவ .. .. | .. | ஷை | 2.30 மணி பி. ப. |
| 28 | ஷை | .. | நயினும்டம் கிழக்கு .. .. | .. | ஷை | 3.00 மணி பி. ப. |

3-170—3.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,848

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

## இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத் துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்** வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்த கரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலே கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படுதல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீடு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 68.12.1 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | ச. | வெளியூர் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லேக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. | ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. .. | 0 | 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 3.1.69 | வெள்ளி .. | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் .. | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் .. | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி .. | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி .. | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| **பெப்புருவரி** .. | 7.2.69 | வெள்ளி .. | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி .. | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி .. | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.2.69 | வெள்ளி .. | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| **மார்ச்சு** .. | 7.3.69 | வெள்ளி .. | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி .. | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி .. | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி .. | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| **ஏப்பிறல்** .. | 3.4.69 | வியாழன் .. | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி .. | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி .. | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி .. | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் .. | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **மே** .. | 9.5.69 | வெள்ளி .. | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் .. | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் .. | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி .. | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| **யூன்** .. | 6.6.69 | வெள்ளி .. | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி .. | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி .. | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி .. | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1968 ம் ௵ டிசம்பர் ௴ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.